Registered as a NewsPaper

22 JUN 2004

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–08 | 22–06–2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை –125

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
077-6059672
(9598)

# கருணாவிற்கு ராணுவப் புலனாய்வுத்துறை பாதுகாப்பு;
# தப்பிச்செல்ல அலிசாஹிர் மௌலானா உதவினார்

## டக்ளஸ் – கருணா நெருக்கமான உறவு ஊடகவியலாளர் சந்திப்பில் நிலாவினி



(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பிலிருந்து கருணாவும் அவருடன் சென்றோரும் தப்பிச் செல்ல முன்னாள் ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா உதவியதாகவும், கொழும்பில் கருணா சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினரின் பாதுகாப்பில் இருந்ததாகவும், டக்ளஸ்தேவானந்த நேரிலும், தொலைபேசியிலுமாகக் கருணாவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளதாகவும், கருணாவுடன் தப்பி ஓடி, தற்பொழுது விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ள நிலாவினி ஊடகவியலாளரிடம் நேற்றைய சந்திப்பில் தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த கருணா வெளியேற்றப்பட்டதையடுத்து கொழும்புக்குக் கருணாவுடன் தப்பிச் சென்றவர்களில் முன்னாள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளீர் படையணித் தளபதி நிலாவினி மற்றும் தீந்தமிழ், லாவண்யா, பிறேமினி ஆகியோர் கடந்த வெள்ளிக் கிழமை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளனர். கருணாவின் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தைவிட்டு வெளியேறிச் சென்ற விபரங்கள் தொடர்பாக விளக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நடைபெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் படுகொலை குறித்து கருணா குதூகலித்தார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நடந்த படுகொலைகளுக்கும் கருணாவிற்கும் தொடர்புகள் இருந்ததாக விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ள நிலாவினி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர் கேட்டகேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும் போது. மட்டக்களப்பில் படுகொலைகள் இடம்பெற்ற பின்னர் கருணாவிற்கு தொலைபேசி அழைப்புக்கள் வரும்.

அந்தத் தொலைபேசி அழைப்புக்களில் கொலை செய்யப்பட்டவர் யார் என்பது எவ்வாறு கொலை செய்யப்பட்டார் எனவும் தெரிவிப்பார்கள் இதனைக் கேட்கும் கருணா குதூகலிப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கருணாவைக் கூட்டிச்சென்றதாக அலிசாஹிர் ஒப்புக்கொள்கிறார்

கருணாவையும் அவருடன் சென்றவர்களையும் மட்டக்களப்பில் இருந்து கொழும்பிற்கு அழைத்துச் சென்றமையை ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானாஒப்புக் கொண்டுள்ளார்.

கருணாவிற்கு மனிதநேய அடிப்படையிலேயே தான் உதவி செய்ததாகவும்அலிசாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

தனது சிறுபிராய நண்பரான கருணா ஏப்ரல் 12 ஆம் திகதி வெளிநாடு செல்வதற்காக கொழும்பிற்குச் செல்வதற்குப் போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்ய தனது உதவிகளைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவைப் பாதுகாக்கவில்லை இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

(கொழும்பு)

கருணாகுழுவினருக்கு இராணுவப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா மறுத்துள்ளார்.

கருணா குழுவினரோடு கொழும்பு சென்ற பெண்போராளிகள் நால்வர் கூறிய கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்தக் கருத்தை அவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரி.பிரதமரைச் சந்திக்க முயன்ற சனாதிபதி சந்திரிகா ஏமாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பிரிட்டன் விஜயத்தின் போது பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்திக்க முயற்சித்த போதும் அது முடியாமையால் ஏமாற்றம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வார கால விஜயத்தை மேற்கொண்டு சந்திரிகா பிரிட்டன் சென்றிருந்தமை தெரிந்ததே.

இதன்போது பிரிட்டிஷ் வெளிவிவகார செயலகம் இரு தலைவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## -மட்டு. சின்ன ஊறணிப்பகுதியில்-
## துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் சின்ன ஊறணிப்பகுதியில் நேற்று அதிகாலை இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்ததாக சிறிலங்காப்பொலிசார் தெரிவித்துள்ளார். இனம் தெரியாத இருவரே இத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நாளை அனுஷ்டிக்க யாழ்.குடாநாட்டில் ஏற்பாடு

எதிர்வரும் ஜுலை 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு அதனை எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடுகள் வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வது தொடர்பான கூட்டமொன்று நேற்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் உதவியுடன் பலாலி விமானத்தளத்தை செப்பனிடும் திட்டத்தை கைவிடத் தீர்மானம்

இந்தியாவின் உதவியுடன் பலாலி விமானத்தளத்தை செப்பனிடும் திட்டத்தைச் சிறிலங்கா விமானப்படை கைவிடத் தீர்மானித்துள்ளது. இத்திருத்த வேலைக்கு இந்தியா மதிப்பிட்டுள்ள செலவீடு மிக அதிகம் என்பதாலும் அவ்வாறு இந்தியா திருத்தவேலை மேற்கொள்ளுவதற்குக் காலதாமதம் ஏற்படும் என்பதாலும் இத்தீர்மானத் துக்கு விமானப் படையினர் வந்துள்ளனர்.

இத்திருத்த வேலையில் இந்தியாவை ஈடுபடுத்து வதானால் தாமதம் ஏற்படும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை இத் திருத்த வேலைத்திட்டம் குறைந்த செலவுடன் நிறைவேற்ற முடியும் என்றுஆலோசனை வழங்கியதாகவும் விமானப்படைத் தளபதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

விழிப்புடன் இருப்போம் விபத்தினைத் தடுப்போம்

யுனிசெவ் வெண்புறா - வன்னி

(9728)

## வரிவிளம்பரம்

**(இறபர்முத்திரை)**

கிளிநொச்சியில் பொலிமர் றபர்ஸ்டாம் உடனுக்குடன் செய்து கொளளவும் போட்டோ கொப்பி லேமனட்டிங் போன்றவைகளையும் உடனுக்குடன் செய்து கொள்ள. பிள்ளையார் பொத்தக சாலை, கண்டிவீதி, கிளிநொச்சி. T.P 0212285750 (சி-9823)

**பெயர்மாற்றம்**

சின்னையா பரமேஸ்வரி ஆகிய எனது பெயர் 21.10.2003 ஆம் ஆண்டு தொடக்கம் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனது புதிய பெயர் சின்னையா பிரசாந்தி என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றேன் தகவல்:-சி.பிரசாந்தி. (4612)

**கதிர் (அமல்) பல், மூக்குக் கண்ணாடியகம்.**

கண்பரிசோதித்து பொருத்தமான பிறேம்களில் உடன் கண்ணாடிகளைச் செய்துபெற்றுக் கொள்ள, பல் கட்டுதல், கிளிப் போடுதல் என்பன உடன்செய்து கொள்ள, A-9வீதி, அரசஅதிபர் இல்லம் முன்பாக கிளிநொச்சி. கிளை.பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு. (4718)

**தவறிவிட்டது**

ஜேசுதாஸ் பற்றீக்யூட் ஆகிய எனது கல்விச்சான்றிதழ்கள், பிறப்புச்சான்றிதழ்கள், கணினிச்சான்றிதழ்கள் இன்னும்பல ஆவணங்கள் அடங்கிய பைல் 12/06/2004 சனிக்கிழமை புது.பொன்னம்பலம் வைத்தியசாலைக்கும் அமலன்ஸ் வெதுப்பத்திற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோ அல்லது அமலன்ஸ் வெதுப்பகத்திலோ ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (4656)

# கிளி.முருகானந்தா மகாவித்தியாலய புதிய மாடிக்கட்டடம் திறப்பு

(விசுவமடு)

கிளி.முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலயத்தில் "நிகொட்" நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இரண்டுமாடி வகுப்பறைக் கட்டடத்திறப்புவிழா இன்று பகல் 12மணிக்கு வித்தியாலய முதல்வர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக நிகொட் கருத்திட்ட திட்டப்பணிப்பாளர் த.லங்காநேசனும் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரும் கலந்து கொள்ளவுள்ளனர். (14)

**தவறிவிட்டது**

வைரவன் கதிரமலை ஆகிய எனது அ.அட்டை இல (572041352V) நிரந்தர பாஸ், உத்தியோக அட்டை ஆகிய அடங்கியபேஸ் 19/06/2004 சனிக்கிழமை புதுக்குடியிருப்புக்கும் முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் (4657)

**வகுப்பு**

கிளிநொச்சியில் ஆங்கிலப் பேச்சு வகுப்பு புதிய பிரிவு ஆரம்பம். காலம் 23-06-2004 புதன்கிழமை, நேரம் பிற்பகல் 5.00 மணி.ஆசிரியர் றஜித், இடம் பேருந்து நிலைய வீதி பாஸ் ஒவிஸ் அருகில் கனகபுரம், கிளிநொச்சி. குறிப்பு: அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். எழுத, வாசிக்க, பேச ஏற்படுத்தப்படும். (4726)



முத்துஐயன்கட்டு வலதுகரை
தான்தோற்றி
நாகதம்பிரான்
ஆலய வருடாந்த



## ஆனி உத்தரப் பொங்கல் விழா

நிகழும் தாரண வருடம் 10ஆம் நாள் 24-06-2004 வியாழக்கிழமை இரவு விஷேட அபிஷேக ஆராதனையும், அதனைத் தொடர்ந்து பொங்கலும் நடைபெறும் 25-06-2004 பகல் அன்னதான வைபவமும், அதனைத் தொடர்ந்து ஏல விற்பனையும் நடைபெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் கலந்து எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

**ஆலய பரிபாலன சபை.**

(4655)

### கடவுச்சீட்டு வழங்கல் தொடர்பான

## இடம்பெயர் சேவை

கிளி. மாவட்டத்தில் கடவுச்சீட்டு வழங்கல் தொடர்பான இடம்பெயர் சேவை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளமையால் கடவுச்சீட்டு விண்ணப்பம் கையளிக்க உள்ளவர்கள் அவ்வப்பகுதி பிரதேச செயலரிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். கடவுச்சீட்டு இடம்பெயர் சேவைக்காகக் கொழும்பிலிருந்து அதிகாரிகள் வரவுள்ளதால் போதிய விண்ணப்பங்கள் கையளிக்க வேண்டிய தேவை உள்ளது. எனவே, கடவுச் சீட்டுப்பெற விரும்புவோர் பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**தி. இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி.**

(சி-9850)

### தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கலந்துரையாடலுக்கான

## அறிவித்தல்

எதிர்வரும் 23-06-2004 காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளரின் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள், திட்டக்குழு பிரதிநிதிகள், கால்நடை வளர்ப்போர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

*மாவட்டப் பொறுப்பாளர்,*
*தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,*
*கிளிநொச்சி.*

(சி-9734)

# உடனடி வேலை வாய்ப்பு

## தமிழீழ தேசியத் துணைப்படை
## தமிழீழம்

தமிழீழ தேசியத் துணைப்படைக்கு உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் முகமாக தமிழீழப்பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயதெல்லை: 18 தொடக்கம் 25 வரை.
2. உடற்தகைமை: தேக ஆரோக்கியம் நன்றாக இருத்தல் வேண்டும்.
3. சம்பளம்: ரூபா 3500/- மாதமொன்றிற்கு.

விண்ணப்பதாரிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல் துறையின் நடுவப்பணியகத்திற்கு எதிர்வரும் 23.06.2004 தொடக்கம் 30.06.2004 வரை சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பொறுப்பாளர்,
ஆளணிப்பிரிவு,
காவல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

குறிப்பு:- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(சி: 9733)

# ஈராக்கிற்கு படைகளை அனுப்பும் முடிவில் எத்தகைய மாற்றத்திற்கும் இடமில்லை

### -தென்கொரியா வெளியுறவு அமைச்சர்

(சியோல்)

**தென்கொரியப் படைகளை ஈராக்கிற்கு அனுப்பும் திட்டம் உடனடியாகக் கைவிடப்படாவிட்டால் 24 மணித்தியாலத்திக்குள் பணயக் கைதியைக்கொன்று விடப்போவதாக ஈராக்கியத் தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர், இது தொடர்பாகத் தீவிரவாதிகளால் வெளியிடப்பட்ட ஒலிநாடா ஒன்று அரேபிய தொலைக்காட்சி ஒன்றில் ஒலிபரப்பானது.**

ஆனாலும்எத்தகைய அச்சுறுத்தல் இருந்தாலும் தமது முடிவில் எத்தகைய மாற்றமும் இல்லை எனத் தெரிவித்துள்ள தென்கொரிய வெளிவிவகார அமைச்சு பணயக்கைதியாகப் பிடிக்கப்பட்ட கெம்சுன்கில்லை விடுவிப்பதற்கான முழுமுயற்சியை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஈராக்கிற்கு அனுப்பப்பட்டால் அவர் சிரைச்சேதம் செய்யப்படுவர் என்ற அச்சுறுத்தல் ஒன்று நேற்று முன்தினம் அல்ஜகீரா தொலைக் காட்சியில் ஒலிபரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கிற்கு மேலும் படைகளை அனுப்பமாட்டோம் என 24மணித்தியாலத்தில் சியோல் உறுதி வழங்காது விடில் மேலும் தாக்குதல் நடத்தப்படும் என தௌபிட் வாசுல் ஜினட் இஸ்லாமியக் குழு எச்சரித்துள்ள நிலையில் தென்கொரியக் கைதி ஒருவரைச் சூழ்ந்துள்ள இஸ்லாமியக் குழு உறுப்பினர்கள்.

# அல்-ஹைதா இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாத இயக்கத் தலைவர் சுட்டுக்கொலை

அல்-ஹைதா இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாத இயக்கத்தின் தலைவரை அல்ஜீரிய நாட்டு இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது.

அல்ஜீரியாவில் செயற்பட்டு வரும் மக்கள் தேசியப்படை என்ற தீவிரவாத இயக்கம் அந்தநாட்டில் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டுவருகின்றது.

இந்தத் தீவிரவாத இயக்கத்தின் நடவடிக்கையினைத் தடுத்து நிறுத்த அல்ஜீரிய இராணுவம் தலைநகரில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த வேளை இதில் தீவிரவாதிகளுடன் நடந்த சண்டையில் மக்கள்தேசியப் படையின் தலைமைப் பொறுப்பில் இருந்த முஸ்தபா அபூல் இப்ராகிம் என்பவர் கொல்லப்பட்டுள்ளார். இவருக்கும் அல்-ஹைதாத் தீவிரவாத இயக்கத்துக்கும் தொடர்பு இருந்ததாக விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

இவரது தலைமையிலான தீவிரவாதிகள் குழுவை முற்று கையிட்டுள்ள இராணுவத்தினர் அக்குழுவினை உயிருடன் பிடித்து விசாரணை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஈராக்கில் கைதிகள் சித்திரவதை தொடர்பில் மூன்று அமெரிக்கப் படையினருக்கு எதிராக விசாரணை

ஈராக்கில் கைதிகள் துன்புறுத்தப்பட்டமை தொடர்பான விசாரணை நேற்று நடைபெற்றது. பாக்தாத்தில் நடைபெற்ற இவ்விசாரணைகள் மூன்று அமெரிக்கப்படைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது. பாலியல் ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் கைதிகள் துன்புறுத்தப்பட்டமை தொடர்பாக இந்த விசாரணைகளின் போது கவனம் செலுத்தப்பட்டது.

கைதிகள் துன்புறுத்தப்பட்டமை தொடர்பான படங்கள் சர்வதேச அரங்கில் பெரும் சர்ச்சைகளை தோற்றுவித்திருந்தது. இதையடுத்து அமெரிக்கா தலைமையில்மேற் கொள்ளப்படும் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தில் கைக்கொள்ளப்படும் நடைமுறைகள் தொடர்பாகவும் பெரும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இத்தகைய விமர்சனங்களும் குற்றச் சாட்டுக்களும் வெளியானதைத் தொடர்ந்து கைதிகள் துன்புறுத்தல் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அமெரிக்க சனாதிபதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**ஈரானிடம் அணுவாயுதம் ஐ.நா. சந்தேகம்**

ஈரானில் பேரழிவு தரும் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக ஐ.நா.சந்தேகம் தெரிவித்துள்ளது. ஈராக் தொன்கணக்கில் யுரேனியத்தை மறைத்து வைத்திருப்பதாகவும் அதன் மூலம் அணுகுண்டைத தயாரிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.




பாக்தாத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் சேத முற்ற காரையும் கட்டடத்தையும் சூழ்ந்து நிற்கும் ஈராக்கியர்கள்.

# வடகொரிய அணுவாயுத நெருக்கடியைத் தீர்க்க சீனாவில் உயர்மட்டப் பேச்சுவார்த்தை

வடகொரியாவின் அணுவாயுத நெருக்கடிகள் சம்பந்தமான மூன்றாவது சுற்று உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளிற்கான அடித்தளத்தை இடுவதற்கான செயல்மட்ட ரீதியிலான கலந்துரையாடல்கள் சீனத்தலைநகரில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இந்தக்கலந்துரையாடலில் வட கொரியா, தென்கொரியா, அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் பங்கேற்றுள்ளன. எனினும் இந்தப் பேச்சுவார்த்தைகள் மீது அதிக எதிர்பார்ப்பு வைக்க முடியாது என சீனா தெரிவித்துள்ளது. விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்வதா இல்லையா என்பது பற்றி தீர்மானிப்பதற்கு முன்னர் அமெரிக்க சனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகள் எவ்வாறு அமையக்கூடும் என்பதை வட கொரியா எதிர்பார்த்துக் காத்திருப்பதாக தோன்றுகின்றதென அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.



பெருந்தொகைத் தனியார் நிதி மூலம் உருவாக்கப்பட்ட உலகில் முதலாவது றொக்கட் விமானம் வளிமண்டலத்துக்கு அப்பாலும் அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

# 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட கார்களை சீனாவில் இருந்து ஜப்பான் திரும்பப்பெற முடிவு

ஜப்பானின் ஹொண்டா மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனம் தமது தயாரிப்பில் உருவான எழுபதாயிரத்திற்கு மேற்பட்ட கார்களைச் சீனாவில் இருந்து திருப்பப்பெற இருக்கின்றது. இந்த நிறுவனம் விற்பனை செய்த எகோட்மாதிரியைச் சேர்ந்த வாகனங்கள் எரிபொருட் தாங்கியில் குறைபாடுகளைக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஹொண்டா நிறுவனம் கடந்த வருடம் உற்பத்தி செய்த எகோட் கார்களின் எண்ணெய்த் தாங்கிகளில் வெடிப்புக்கள் உருவாகி வருகின்றது. இதன் காரணமாக இக்கார்களினைச் சோதனை செய்தோ அல்லது திருத்தி அமைத்தோ மீண்டும் விற்பனை செய்வதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

# தெற்கு லெபனானில் போராளிகளின் நிலைகள் மீது இஸ்ரேலியப்படையினர் விமானத்தாக்குதல்


இஸ்ரேலியப் படையினர் தெற்கு லெபனானில் உள்ள கிஸ்புல்லாப் போராளிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இஸ்ரேலின் இந்த விமானத் தாக்குதலை அடுத்து கிஸ்புல்லாப் போராளிகள் இஸ்ரேலீன் வட பிரதேசத்தை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை விமானத் தாக்குதல்கள் மூலம் கிஸ்புல்லாப் போராளிகளின் நிலைகள் மீது துல்லியமாகத் தாக்குதல் நடத்தி அவற்றை அழித்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பிரிட்டன் பா.உ.கள் மீது துப்பாக்கிப் பிரயோகம்

இஸ்ரேலிய காஸா பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரிட்டிஷ் பாராளுமன்றக் குழுவின் மீது இனந்தெரியாதோர் குழுவொன்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளது.

துப்பாக்கிதாரியின் இலக்கினை முறியடிக்கும் பொருட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கீழே குனிந்ததால் உயிர் தப்பியதாகக் காஸாப் பகுதியிலுள்ள ரபா அகதிமுகாம் பகுதிக்குச் சென்ற பிரிட்டிஷ் மாணவனான டொம் ஹன்டன் என்பவர் கடந்த வாரம் சுட்டுக்கொல்லப்பட்டார்.டொம் ஹன்டனின் கொலை குறித்து விசாரணை மேற்கொள்ளும் பொரிட்டே பாராளுமன்றக் குழு காஸாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தது. பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் பிரிட்டனில் உள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



வோஷிங்டனில் நெஞ்சு, வயிறுப்பகுதியில் ஒட்டிப்பிறந்த 4 மாதக்குழந்தையை 6 மணித்தியால கடுமையான உழைப்பின் மூலம் வெற்றிகரமாக பிரித்த வைத்தியர் குழு.

# ஓமந்தை சோதனைநிலையத்தில் இராணுவக் கெடுபிடிகள் அதிகரிப்பு

## பேருந்து நிலையமும் பின்நகர்த்தல்

(வவுனியா செய்தியாளர்)

**ஓமந்தைசோதனை நிலையத்தில் கடந்த சில நாட்களாக இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன.**

ஓமந்தையில் விடுதலைப் புலிகளின் தடை முகாமிலிருந்து இராணுவத்தின் சோதனை நிலையம் வரையிலான பகுதிவரை இது வரை சேவையில் ஈடுபட்ட பேருந்துகளைத் தொடர்ந்து சேவையில் ஈடுபட இராணுவம் மறுப்புத் தெரிவித்து, அச்சேவையைக் கடந்த சனிக்கிழமை முதல் தடை செய்துள்ளது. அத்துடன் இராணுவச் சோதனை நிலையத்தைத் தாண்டி அமைக்கப்பட்டிருந்த பேருந்து நிலையத்தையும் இராணுவம் மேலும் 200 மீற்றர் தூரம் வரை பின் நகர்த்தியுள்ளது.

இவ்வாறான இராணுவத்தின் கெடுபிடிகளால் ஓமந்தை சோதனை நிலையம் ஊடாக பேருந்தில் பயணிக்கும் பயணிகள் விடுதலைப்புலிகளின் தடைமுகாமில் இருந்து பேருந்து நிலையம் வரையான ஒரு கிலோ மீற்றருக்கும் மேற்பட்ட தூரத்தை நடந்தே செல்ல வேண்டியநிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இதனால் இதனூடாகப் பிரயாணம் செய்யும் வயோதிபர்களும், குழந்தைகளுடன் பிரயாணம் செய்யும் தாய்மார்களும், சிறுவர்களும் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குவதனை அவதானிக்க முடிகின்றது. (10)

# சிற்றூர்திகளில் அதிகளவு பயணிகளை ஏற்றுவதால் பெரும் அசௌகரியம்

கிளிநொச்சி-முகமாலை மார்க்கத்தில் போக்குவரவுப் பணிகளில் ஈடுபட்டுவரும் மினிபஸ்கள் (சிற்றூர்தி) அதிகளவான பயணிகளை ஏற்று வதில் குறியாக இருப்பதால் பயணிகள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பயணத்தை மேற்கொண்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வயோதிபர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகளுடன் பிரயாணம் செய்வோர் எந்தவித இடஒதுக்கீடுகளும் அற்ற முறையில் நெருக்குவாரத்திற்கு மத்தியில் நின்றபடியே பிரயாணம் செய்கின்றனர். தமது வருமானத்திலேயே அதிகளவு கவனம் எடுத்துச் செயற்படும் பஸ் நடத்துனர்கள் பிரயாணிகளை மோசமான முறையில் நடத்துவதானது மனிதாபிமானத்தையே கேள்விக் குறியாக்கியுள்ளது.

நடத்துனர்களின் இச்செயற்பாட்டைத் தட்டிக் கேட்கின்ற பிரயாணிகளை நடத்துனர்கள் படுமோசமான முறையில் திட்டுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இப்பதட்டப்பட்ட நிலைமைகளைத் தவிர்ப்பதானால் போக்குவரவுப் பணிகளில் ஈடுபடும் வாகனங்களின் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என மக்கள் தமது கருத்தைத் தெரிவித்துள்ளனர். (து)

# தொலைத்தொடர்பு சேவையில் அண்மை நாட்களாக குழறுபடி

(செட்டிகுளம்)

வவுனியாவில் அண்மை நாட்களாக தொலைத்தொடர்பு சேவையில் அதிக அளவான நெரிசல் இருப்பதால் தொலைபேசிப் பாவனையாளர்கள் பெரும் சிரமத்திற்கு முகங்கொடுத்து வருகின்றனர். வவுனியா மாவட்டத்தை விட வேறு மாவட்டங்களுக்கு மாலை ஆறு மணியின் பின்னர் தொடர்பு கொள்வது மிகவும் கஷ்ரமாக இருக்கின்றது . அத்துடன் சர்வதேச வலயமைப்புடன் தொடர்பு கொள்வது மிகவும் சிரமமாக இருக்கின்றது இதன் காரணத்தால் பாவனையாளர்கள் அவசர தேவைகளுக்குக் கூட தொடர்பு கொள்ளமுடியாதவர்களாக உள்ளனர்.

இது சம்பந்தமாக தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பல முறை தெரிவித்த போதிலும், எந்த விதமான பிரயோசனமும் இல்லை என்றுபாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். இது இவ்வாறு இருக்க தொடர்பு கொள்ளப்படாத வெளிநாட்டு இலக்கங்கள் பட்டியலில் இணைக்கப்பட்டுப் பலருக்கு பட்டியல் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## வறுமைக் கோட்டிற்கு உட்பட்டோருக்கு சுய முயற்சிக்கடனுதவி வழங்கல்

வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் செல்வாநகர், விவேகானந்தநகர், இரத்தினபுரம், உருத்திரபுரம்,மருதநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மேற்படி ஆறு பயனாளிகளுக்கு ரூபா ஒரு இலட்சம் சுயதொழில் முயற்சிக்கான கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது.சென்ற 12ஆம் திகதி யு.என்.டி.பி.நிறுவன உதவியுடன் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன மாவட்ட செயலகத்தில் வைத்து இக்கடனுதவி வழங்கப்பட்டது. முன்னதாக கிளிநொச்சிப் பிரதேச இணைப்பாளரினால் கடனுதவிக்கான விளக்கம் அளிக்கப்பட்டது.

### 23 பாடசாலைகள் இராணுவத்தால் சேதம்

கடந்தகால சிறிலங்காஇராணுவ நடவடிக்கைகளால் மன்னாரில் 23 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. என பிரான்சிலுள்ள மனிதவுரிமைகள் நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.(மி)

# கிளி. மாவட்ட பாடசாலைகளின் மெய்வல்லுனர் போட்டி நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கான மெய்வல்லுனர் போட்டி-2004 இறுதிநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு கிளிநொச்சி பரந்தன் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் ப. அரியரத்தினம் தலைமையில்



நடைபெற்ற மாவட்ட மெய்வல்லுனர் போட்டி நிகழ்வில் கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.ஆரம்ப நிகழ்வாகத் தமிழீழ தேசியக்கொடியினை பரந்தன் இந்து ம.வி. முதல்வர் ம.பத்மநாபன் ஏற்றிவைக்க மங்கல விளக்கினை கிளி. வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் க.ம.பத்மநாதன், கி.சின்னராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து கிளி. மாவட்ட பாடசாலைகளுக்கான மெய்வல்லுனர் போட்டி இடம்பெற்றது. போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை கிளி. அரச அ[illegible]ர் தி. இராசநாயகம் வழங்கிக்கௌரவித்தார். (சோ,கு)

# புலிகளின் பெயரைப் பாவித்து சிலர் அடாவடித்தனம்

**வவு.அரசியல் துறை தெரிவிப்பு**

(செட்டிகுளம்)

வவுனியாவில் புலிகளின் பெயரினைப் பாவித்து சில நபர்கள் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருவதாகவும், இவர்கள் தொடர்பான விபரங்கள் கிடைத்திருப்பதாகவும், இவர்கள் தொடர்ச்சியாக இவ்வாறு ஈடுபடும் பட்சத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் தெரிவிக்கின்றனர். சில நபர்கள் இயக்க உறுப்பினர்கள் போன்று மக்களை ஏமாற்றுவதாகவும், அது மட்டுமல்லாது சைனைட் குப்பி போன்று போலியானவற்றினை அணிந்து கொண்டு இயக்கம்போன்று செயற்படுவதாகவும், இது தொடர்பாக மக்கள் பலர் தமக்கு முறையிட்டிருப்பதாகவும் தெரிவித்தனர். (21)

# முல்லைத்தீவு புனித இராயப்பர் முன்பள்ளி விளையாட்டு விழா

கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ்பத்திநாதர் மேற்பார்வையில் இயங்கி வரும் புனித இராயப்பர் முன்பள்ளியின் விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.:0 மணிக்கு முல்லைத்தீவு பங்குத்தந்தையின் தலைமையில் ஆரம்பமானது.

மங்கல விளக்கினை முதன்மை விருந்தினர் றொபின்ஸ்சன் அடிகளாரும், ஜேம்ஸ்பத்தி நாதர்அடிகளாரும் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை செந்தளிர் இல்லப்பணிப்பாளர் செல்வி ஏற்றி வைக்க,கியூடெக் நிறுவனக் கொடியினை ஜேம்ஸ்பத்தி நாதர் அடிகளார் ஏற்றிவைத்தார். ஒலிம்பிக்தீபத்தினை பிரதம விருந்தினர் றொபின்ஸ்சன் அடிகளார் ஏற்றி வைத்தார்.

ஆசியுரையினை முல்லைத்தீவுப் பங்குத்தந்தை ஜேம்ஸ்பத்தி நாதர் அடிகளார் நிகழ்த்தினார். இதன்போது பல்வேறு போட்டிகளுடன் உடற்பயிற்சிக் கண்காட்சியும் விநோத உடைப்போட்டியும் நடைபெற்றது. (20)

# பொன். விநாயகமூர்த்தி நினைவு மண்டபம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

நாட்டுப்பற்றாளர் பொன். விநாயகமூர்த்தியின் நினைவாக நினைவு மண்டபத்திறப்பு விழாவும் நினைவஞ்சலி நிகழ்வும் இன்று 22ஆம் திகதி கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்வி நிறுவன வளாகத்தில் இடம் பெறவுள்ளது.கிளிநொச்சி தொழில் நுட்ப நிறுவன முன்னாள் இயக்குனர் சபைத்தலைவர், நாட்டுப்பற்றாளர் பொன். விநாயகமூர்த்தியின் ஞாபகார்த்த இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்வி நிறுவனசமூகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ,கு.,15)

# பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய 36 சிறுவர்கள் இல்லங்களில் இணைப்பு

மட்டக்களப்பில் வறுமை காரணமாக பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய 36 சிறுவர்களை தமிழர் புனர்வாழ்வுக் கழக சிறுவர் நலன் திட்டப் பிரிவினர் இனங்கண்டுள்ளனர்.



இனங்காணப்பெற்ற 36 சிறுவர்களிற்கும் கல்வியறிவூட்டி நல்வழிப்படுத்தும் நோக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் சிறுவர் இல்லங்களில் அவர்கள் இணைக்கப்பெற்றுள்ளனர்.மாணிக்கவாசகர் இல்லத்தில் 10 பேரும், விவேகானந்தா இல்லத்தில் 08 பேரும், சக்தி இல்லத்தில் 06 பேரும், கதிரொளி இல்லத்தில் 12 பேரும் சிறுவர் இல்லங்களில் இணைக்கப்பெற்றவர்களாவர். (சோ,கு)

# கால்வாய் நோய் பரம்பலும் தடுப்பு நடவடிக்கைகளும்

வைரஸ் கிருமிகளினால் ஏற்படும் இந்நோய் (காற்றினால்) பரவும் வீதம் அதிகமாயிருப்பதால், இதனைக் கட்டுப்படுத்தல் மிகவும் அவசியமானதாகும்.

**நோயின் அறிகுறிகள்**

01.இரைவெட்டாது.
02.நாக்கிலும், வாயைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கொப்புளங்கள் தோன்றும் பின்னர் கொப்புளங்கள் உடைந்து புண்ணாக மாறும்.
03.தொடர்ந்து வாயிலிருந்து வீணி வடியும்.
04.வாயினுள் காயங்கள் ஏற்படுவதால் துர்நாற்றம் ஏற்படும்.
05.கொப்புளங்கள், காயங்கள் என்பன குரை இடைவெளிக்குள் காணப்படும். இதனால் நடக்கக் கஷ்டப்படும். நொண்டும்.
06.காய்ச்சல் காணப்படும்.
07.சில மாடுகளில் மடியிலும் கொப்புளங்கள் காணப்படும்.

**சிகிச்சை முறை**

01.நோய் ஏற்பட்ட மாடுகளின் வாய்ப் பகுதிக்கு உப்பு நீர் கொண்டு சுத்தப்படுத்திய பின், சீனாகாரம் அல்லது பிரண்டைத்தண்டும் உப்பும் சேர்ந்த கலவை கொண்டு தொற்று நீக்க வேண்டும்.
02.காலில் ஏற்படும் காயங்களிற்கு உப்பு நீரால் சுத்தப்படுத்திய பின்பு செப்பு சல்பேற்று கரைசல் கொண்டு கழுவவேண்டும்.
03.காயங்களில் புழு தொற்றல் ஏற்பட்டால் புழுப் பவுடர் போட வேண்டும்.

**கட்டுப்படுத்தும் முறை**

01.தொற்று ஏற்பட்ட மாடுகளைத் தனிமைப்படுத்த வேண்டும்.
02. இடத்துக்கு இடம் கொண்டு செல்வதும் தடை செய்யப்படவேண்டும் .
03. இறைச்சி சாப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும்.
04. தொற்று ஏற்படும் மாடுகளில் இருந்து பெறப்படும் பால் குடிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

இவற்றுக்கும் மேலாக கால்வாய் நோய்த்தொற்று ஏற்பட்டதற்கான அறிகுறிகள் தென்படுமாயின், அருகில் உள்ள கால்நடை வைத்தியரை அல்லது கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியரைத் தொடர்பு கொண்டு தடுப்பூசி ஏற்றிக் கொள்ளல் வேண்டும். என பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நயினாதீவு செல்லும் தனியார் படகுகளில் சிங்கக் கொடிகட்ட கடற்படை வற்புறுத்து

(வடமராட்சி)

**குறிகாட்டுவான் இறங்கு துறையிலிருந்து சேவையில் ஈடுபடும் தனியார்படகுகள் அனைத்திலும் சிங்கக்கொடியினைப் பறக்க விடவேண்டுமெனக் கடற்படை அறிவித்துள்ளது.**

குறிப்பாக நயினாதீவு நாக பூசணி அம்மன்ஆலயவருடாந்த மகோற்சவத்தில் ஈடுபடும் பயணிகள் படகுகளிலேயே சிங்கக் கொடிகளைப் பறக்கவிட வேண்டுமெனக் கடற்படை அறிவித்துள்ளது.

அதன்மூலம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் கடற்படையினரது ரோந்துப்படகுகள், பயணிகள் படகுகளைச் சுலபமாக இனங்கண்டு கொள்ளமுடியுமெனத் தம்மிடம் கடற்படையினர் தெரிவித்ததாகப் படகுகளின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் உண்மையில் நயினாதீவு நாகவிகாரைக்கு அண்மைக்காலமாக பெருமளவு பௌத்த யாத்திரிகர்கள் வந்து செல்கின்ற நிலையில், அவர்களிடம் தமது வீரப்பிரதாபங்களைக் காட்டிக் கொள்ளவே எமது படகுகளில் சிங்கக்கொடிகளைப் பறக்க விடுமாறு இவர்கள் நிர்ப்பந்திக்கின்றனர் என மேலும் அப்படகுகளின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

---

----- -சர்வதேச த.மா.பேரவை ஏற்பாட்டில்- -----

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு கவிதை, சிறுகதைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினத்தையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரால் பல்வேறுவிதமான போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் தமிழீழ போராட்ட வரலாறுகள்மற்றும் தமிழர்களது அபிலாசைகள், இன்றைய அரசியல் நிலவரங்கள் என்பனவற்றை மையமாகக் கொண்ட கவிதை மற்றும் சிறுகதைப் போட்டிகளை நடத்த சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஆக்கங்களைக் கோரியுள்ளது.

இதற்கமைவாக ஆக்கங்களை எழுதிப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் யாழ்.மாவட்டதலைமைச்செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி இடம்பெறும் கரும்புலிகள் தின விசேட நிகழ்வின்போது வழங்கப்படும் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் அறிவித்துள்ளனர். (33)

---

# வர்த்தகர் மீது பொய் முறைப்பாடு படையதிகாரி மன்னிப்புக் கோரினார்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கின் இன்பருட்டி கடற்கரையில் வைத்து வர்த்தகர் ஒருவருக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உரிய படையதிகாரி மன்னிப்புக் கோரியதையடுத்து சுமுகநிலை ஏற்பட்டுள்ளது.

முன்னதாகக் குறித்த வர்த்தகரே தனக்குகொலை அச்சுறுத்தலை விடுத்திருந்ததாகவும், தனது சகசிப்பாயினைத் தாக்கியிருந்ததாகவும் முறைப்பாடொன்றினை படையதிகாரி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் செய்திருந்தார்.

இதையடுத்து நேற்றுமுன்தினம் மாலை மேலதிக விசாரணைக்கு குறித்த வர்த்தகர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். அவ்வேளையில் குறித்த வர்த்தகர் சம்பவ இடத்தில் அசம்பாவிதம் இடம் பெற்றிருந்தவேளை நின்றிருந்த மீனவ சங்க பிரதிநிதிகளையும் பொலிஸ் நிலையத்திற்குச் சாட்சியாக அழைத்துச்சென்றிருந்தார்.

அவர்கள் அனைவரும் குறித்த படையதிகாரியினது நடவடிக்கைக்கு ஒட்டுமொத்த எதிர்ப்பினைத் தெரிவித்ததையடுத்து பொலிஸ் உயரதிகாரி குறித்த இராணுவ அதிகாரியின் பொய்யான வழக்கினை உணர்ந்து அவரை எச்சரித்துள்ளார். அத்துடன் அவரை வர்த்தகரிடம் மன்னிப்புக்கோர வைத்ததுடன் சுமுக நிலையையும் ஏற்படுத்தினார்.

---

# சட்ட விரோத மண் அகழ்வை தடுக்க தீவிர நடவடிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதிகளில் குறிப்பாக-மந்துவில்,வரணி,கெற்பேலி, மட்டுவில்,கச்சாய்,வடக்கு மிருசுவில்,-விடத்தற்பளை போன்ற இடங்களில் தொடர்ந்தும் சட்ட விரோத மண்அகழ்வு இடம் பெற்று வருகிறது.

இது குறித்துப் பொது மக்களிடம் இருந்து பெருந்தொகையான புகார்கள் தமக்கு வந்திருப்பதாகவும் சம்பந்தப்பட்ட சட்டவிரோத மண்கடத்தல், மரம் வெட்டி கடத்தல் போன்றவற்றில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் கொடிகாமம் தமிழீழ அரசியல் துறையினர் தெரிவிக்கின்றனர். தொடர்ந்தும் எம் மண்ணின் வளங்களை சொந்த இலாபங்களுக்காகச் சுரண்ட முற்படும் நபர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாகவும் தெரியவருகிறது. (28)

---

# அகதிகளாக தஞ்சமடைந்தோருக்கு லண்டனில் நடந்த அவலம்

(தென்மராட்சி)

அகதிகளாக லண்டனில் தஞ்சமடைந்த தம்பதியினர் நான்கு ஆண்டுகளின் பின் தமது குழந்தையையும் பரிதாபமாக இழந்து, நாடு திருப்பியனுப்பப்பட்டுள்ள சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

கொடிகாமம் புகையிரத வீதியைச் சொந்த வதிவிடமாகக் கொண்ட விநாயகமூர்த்தி(வயது 39), என்பவர் மனைவியுடன் கடந்த 2000ஆம் ஆண்டு சனவரி மாதம் இங்கிருந்து அகதியாய் லண்டன் சென்று, கடந்த நான்கு வருடங்களாக பெருவில் என்ற இடத்தில் வாடகை வீட்டில் அகதிப் பதிவுடன் வசித்து வந்தார்.

அந்தநாட்டின் வதிவிடக் குடியுரிமை இவர்களுக்கு வழங்கப்படாத நிலையில், நீதிமன்றில் குடியுரிமை கேட்டு விண்ணப்பித்திருந்தனர். இவர்களை திடீர் என்று விசாரணைக்கு அழைத்த அந்நாட்டின் வெளிநாட்டு இலாகா அதிகாரிகள் உடனடியாக நாட்டை விட்டுவெளியேற வேண்டும் என நிர்ப்பந்தம் செய்தனர். இவர்களுடைய மகளான அபிரா (பதினொரு மாதக்கைக் குழந்தை) சுகவீனமுற்று இருந்த நிலையில் எந்தவித ம[illegible] சிகிச்சைகளோ, தடுப்பூ[illegible], சோதனைகளோ [illegible]மேற்கொள்ளப்படாது கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாய் இவர்கள் விமானத்தில் ஏற்றி இலங்கைக்கு [illegible] திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். பன்னிரண்டு மணி நேர விமானப் பயணத்தால் இக் குழந்தையின் உடல் நிலைமேலும் மோசமடைந்தது. இக்குழந்தை கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலன் அளிக்காமையால் மரணம் அடைந்துள்ளது. இத்துயரச் சம்பவம் புலம் பெயர்ந்து அந்த நாட்டில்வாழும் ஈழத் தமிழர்களின் உள்ளங்களில் கடும் அதிர்ச்சி அலைகளைத் தோற்றுவித்திருக்கிறது. (28)

---

# ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு தென்மராட்சியில் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

அந்தவகையில் தென்மராட்சி கல்வி வலயபாடசாலைகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்ய 120 ஆங்கில பாடஆசிரியர்கள் தேவைப்படுகின்றபோதும் இக் கல்வி வலயப்பாடசாலைகளில் 34 ஆங்கில பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர். இவ் 34 ஆசிரியர்களிலும் 22 ஆசிரியர்களே நிரந்தர நியமனம் பெற்றவர்கள் ஆவர் ஏனைய 12 ஆசிரியர்களும் தற்காலிக சேவை அடிப்படையில் பயிற்றுவித்து வருகின்றனர்.

இதனால் தென்மராட்சிப் பிரதேச மாணவர்களின் ஆங்கில பாடக்கற்றல் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இப்பிரதேச வாழ் மாணவர்களின் ஆங்கிலமொழி அறிவாற்றலில் பல பின்னடைவுகள் ஏற்பட்டிருப்பதாக கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (33)

---

# காலாவதியான பொருட்களை கண்டு பிடிக்கும் பணி தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் விற்பனையாகும் காலாவதியான பொருட்களைத் தேடிக்கண்டுபிடித்து அழிக்கும் நடவடிக்கைகளை தமிழீழ சுகாதாரப் பிரிவினரும், பொதுச் சுகாதாரப் பிரிவினரும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய காலாவதியான உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் பாவனை வகைகளே குறிப்பாக விற்பனையாவது அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டு வந்த குறைபாடுகளைத் தொடர்ந்தே இந்நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில்இவர்கள் வியாபார நிலையங்களில் திடீர் சோதனைகளை மேற்கொண்டு காலாவதியான பொருட்களைக் கண்டுபிடித்து அழித்து வருகின்றனர். (33)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சங்கானை மற்றும் தெல்லிப்பளை ஆகிய கோட்டக் கல்விப் பிரிவுகளுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கைகல்வி நிர்வாகசேவை அல்லது இலங்கை அதிபர்சேவை தரம்1 ஐப் பூர்த்திசெய்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.இதற்கமைவாக விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை வலிகாமம் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

---

# மகாகும்பாபிஷேகம்

சாவகச்சேரி- கல்வயல், பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 25.06.2004. அன்று பகல் 9.31 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் தென்மராட்சியின் தலைசிறந்த நாதஸ்வரமேதை, கானவாரிதி கே.எம்.பஞ்சாபிகேசன் குழுவினரின் தவில், நாதஸ்வர கச்சேரியும் நடைபெறவுள்ளது.

---

# மாம்பழம் சந்தியை அண்மித்து கண்ணிவெடி அகற்றல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை மாம்பழம் சந்தியை அண்மித்த பகுதிகளில் உள்ள தனியார் காணிகளிலும் விவசாய நிலங்களிலும் படையினரால் புதைத்துவைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்தகால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது மேற்படி பகுதிகளில் படையினரால் புதைத்துவைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளால் அப்பகுதி மக்கள் பல்வேறு அபாயங்களையும் எதிர்கொண்டு வந்ததுடன் அப்பகுதி மக்களின் மீள்குடியமர்வு மற்றும் விவசாய நடவடிக்கைகள் என்பன பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இதனைச் சுட்டிக்காட்டி இப்பகுதி மக்கள் விடுத்துவந்த கோரிக்கைகளைத் தொடர்ந்து "ஹலோரெஸ்" அமைப்பினர் இப்பகுதிகளில் வெடிபொருள் அகற்றும் பணிகளை ஆரம்பித்துள்ளனர். (33)

---

# தென்மராட்சிப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதிகளில் சட்டவிரோத சாராய விற்பனையும் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதும் அதிகரித்துள்ளது. மக்கள் வாழ்விடங்களை அண்டியுள்ள பகுதிகளிலேயே இச்செயல் இடம் பெற்றுவருகிறது, இது மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இப்பகுதிகளில் சாராயம் விற்போரும் குடிப்போரும் அதிக அளவில் நடமாடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாய் மந்துவில் கிழக்கு, கொடிகாமம் மத்தி, மட்டுவில் படித்தமகளிர் குடியேற்றத்திட்டம், தவசிகுளம் ,வடவரணி,கல்வயல், சாவகச்சேரி நகரத்தை அண்டிய பகுதிகளில் இச் சட்டவிரோத சாராய விற்பனைமையங்கள் இயங்கி வருகின்றன, இதனால் சமுதாய மட்டத்திலும், குடும்ப மட்டத்திலும் இளைஞர் மத்தியில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. (28)




# தடம்பதிக்கும் கிளி, முல்லை. கடினப்பந்து கிரிக்கெட் அணி

-உருத்தூர் சிவன்-

தமிழீழ விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில் தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில்14 வயதுக்குட்பட்ட கிளிநொச்சி மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மாவட்டஅணி என்பன இரண்டு நாள் கிரிக்கெட் பயிற்சி முகாம் ஒன்றில் கலந்து கொண்டன.




தமிழீழத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஓரளவு கடினப் பந்து கிரிக்கெட் விளையாட்டில் முன்னேற்றமடைந்து காணப்படுகின்றது. இவ் விளையாட்டினை தமிழீழத்தில் ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ விளையாட்டுத்துறை மூன்றாவது தமிழீழ தேசிய விளையாட்டு விழாவில் கடினப்பந்து கிரிக்கெட்போட்டியையும் அதற்கு ஏற்ப விளையாட்டு மைதானத்தையும் பலத்த பிரயத்தனத்தின் மத்தியில் அமைத்து நடாத்திமுடித்தது. இப்போட்டிகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு அணிகள் குறுகிய காலப் பயிற்சியுடன் கலந்து கொண்டன அதன்பின்னர் கடினப்பந்து கிரிக்கெட்போட்டிகள் இடம்பெறவில்லை. எனினும் விளையாட்டுத்துறையின் முயற்சியினாலும் ஆர்வம்கொண்ட அலன் போன்றோர்களின் முயற்சியினாலும் தற்போது அணியின் பயிற்சியாளர் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 14வயதுக்கு உட்பட்ட அணி உருப்பெற்றது.

குறுகிய கால கடினப்பந்து கிரிக்கெட் பயிற்சியை பல்வேறு நெருக்கடியின் மத்தியில் அடிப்படைப்பயிற்சியைப் பெற்ற இவ்வணி தமிழீழ விளையாட்டுத்துறையின் ஒழுங்குபடுத்தலில் யாழ்ப்பாணம் விக்டோரியா கல்லூரி, யாழ்ப் பாணக்கல்லூரி என்பனவற்றுடன் சினேகபூர்வ கடினப்பந்து கிரிக்கெட் போட்டியில் கலந்து விக்டோரியாக் கல்லூரி அணியுடனான போட்டியில் சமநிலையையும், யாழ்ப்பாணக்கல்லூரியுடன் தோல்வியையும் சந்தித்தது.

மேற்படி அணியே அண்மையில் தம்புள்ளயில் இரு



நாட்கள் அடிப்படை கடினப்பந்து கிரிக்கெட் பயிற்சியில் பங்கு கொண்டது. இதிலும் இவ் அணிவீரர்கள் அனைத்துப் பயிற்சிகளிலும் சிறப்பாக செயற்பட்டதுடன் பயிற்றுவிப்பாளர்களின் பாராட்டுதலையும் பெற்றனர். வடமத்திய மாகாண கிரிக்கெட் சம்மேளனத்தின் பயிற்றுவிப்பாளர் திரு.மஞ்சுள கருத்துக் கூறுகையில், "விளையும் பயிரை முளையில் தெரியும்'' என்பது போல சிறப்பாக ஆர்வத்துடனும் நுணுக்கங்களை துல்லியமாகவும் கற்றுக் கொண்டார்கள் நிச்சயம் இவர்கள் தொடர்பயிற்சி பெறுவார்களாயின் சிறப்பான இடத்தைப்பெறுவார்கள் என்றார்.




மட்டக்களப்பு மாவட்ட கடினப்பந்து கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் திரு.சாசன்ராஜன் இவர்களைப் பற்றி குறிப்பிடுகையில் இவர்களின் ஆர்வம் என்னை வியப்புக் குள்ளாக்கியது. தொடர்ச்சியான அடிப்படைப்பயிற்சிகளை வழங்கினால் நிச்சயம் இவர்களால் பிரகாசிக்க முடியும் என்றார்.

இப்பயிற்சியில் பயிற்றுவிப்பாளர்களாக திரு.மஞ்சுள, திரு. சாசன்ராஜன், திரு.கொட்டேக் கொட என்போர் கலந்து கெண்டனர்.எனவே இவர்களுக்கான தொடர்பயிற்சிகளை வழங்க சம்பந்தப்பட்ட அனைவரும் முனைப்புடன் செயற்படுவார்களாயின் நிச்சயம் உலக சாதனையாளன் முரளி தரனைப் போல் எமது வீரர்களும் கிரிக்கெட்டில் பிரகாசிப்பார்கள் என்பது திண்ணம்

# எதிர்பார்க்கைக்கு மாறாக ஐரோப்பிய கால்பந்துப் போட்டி


லூயிஸ் பிக்கோ (போர்த்துக்கல்)


பிரான்சிஸ்கோ ரொட்டி (இத்தாலி)

உலகின் இரண்டாவது மிகப் பெரிய கால்பந்துத் தொடரான ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான ஐரோப்பியக் கிண்ணத்துக்கான கால்பந்துப் போட்டிகள் கால் இறுதியை அண்மித்துவிட்டன.

இவை உலகக்கிண்ணத்தைப் போன்று 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்றன. இதனால் இப்போட்டிகளை மினி உலகக் கிண்ணம் என்று அழைப்பதுண்டு.

இதில் ஐரோப்பியக் கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் மாத்திரமே கலந்துகொள்ளும். இதனை இம்முறை போர்த்துக்கல் ஏற்று நடத்துகின்றது.

கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டிகள் யூலை 4 ஆம் திகதி இறுதிப் போட்டியுடன் நிறைவடைகின்றது.

16 அணிகள் பங்கேற்கும் இப் போட்டித் தொடர் நான்கு அணிகளைக் கொண்டு நான்கு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

குழு A-யில் போர்த்துக்கல், ஸ்பெயின், கிரீஸ், ரஷ்யா, அணிகளும்,

குழு B-யில் பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து, குரோசியா,அணிகளும்.

குழு C-யில் சுவீடன், டென்மார்க், பல்கேரியா, இத்தாலி அணிகளும்.

குழு D-யில் செக்குடியரசு, ஜேர்மனி,லாத்வியா, கொலண்ட் அணிகளும் பங்கேற்கின்றன.


டேவிட் பெக்காம் (இங்கிலாந்து)
சினடின் சிடான் (பிரான்ஸ்)

முதல் முறையாக லீக் முறையில் நடைபெறும் ஐரோப்பியக்கிண்ணப் போட்டிகள் தத்தமது அணிகளின் பலம் பலவீனங் களைச் சோதிக்கும் சோதனைக்கள மாகவும் அமைந் துள்ளது.இதனை உறுதிப்படுத்தும் வகையில் கால்இறுதிக்கான வாய்ப்பைப் பெறும் என எதிர்வு கூறப்பட்ட முன்னணி அணிகள் நெருக்கடிகளைச் சந்தித் துள்ளன.




குறிப்பாக குழு-Aயில் கிரீஸ் அணி வரலாற்றில் முதற் தடவையாக கால் இறுதிக்குத் தெரிவாகியுள்ளது. இதன் மூலம் பலம் வாய்ந்த ஸ்பெயின் அணி லீக் போட்டி யுடன் போட்டித் தொடரில் இருந்து வெளியேறியது. மேற்படி குழுவில் போட்டியை நடத்தும் போர்த்துக்கல் அணி கடுமையாகப் போராடி அரையிறு திக்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது.

குழு B யைப் பொறுத்தவரை பிரான்ஸ், இங்கிலாந்து அணிகள் பலம் பொருந்திய அணிகளாகத் திகழ்கின்ற போதும் குரோசியா அணி பிரான்ஸ் அணியைச் சமப்படுத்தியதன் மூலம் இங்கிலாந்து பிரான்ஸ் அணிகள் கால் இறுதி வாய்ப்பைப் பெறுவதற்குக்கடுமையாகப் போராட வேண்டியுள்ளது.

குழு C -யில் இடம்பெறும் 1968 ஆம் ஆண்டு ஐரோப்பிய கிண்ணத்தைக் கைப்பற்றிய இத்தாலி அணி கால் இறுதிக்கு முன்னேறுவதில் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இதனால் இத்தாலி இன்று நடைபெறும் பல்கேரியாவுக்கு எதிரான போட்டியில் வெற்றி பெறவேண்டிய கட்டாய நிலையிலுள்ளது. இக்குழுவில் டென்மார்க் ,சுவீடன் அணிகள் பலம் பொருந்திய அணிகளாகத் திகழ்கின்றன.

குழு D-யில் இடம்பெறும் ஐரோப்பியக் கிண்ணத்தை மூன்று தடவைகள் கைப்பற்றிய ஜேர்மனி இம்முறை யாரும் எதிர்பார்க்காத வகையில் பின்னடைவைக் கண்டுள்ளது.

இவ்வணி இப்போட்டித் தொடரில் முதற்தடவை கால் இறுதிக்குத் தகுதிபெற்ற செக்குடியரசை வென்றாலே கால் இறுதிக்குத் தகுதிபெறலாம் என்ற நிலையிலுள்ளது. இது ஜேர்மனிக்கு ஜீவமரணப் போராட்டமாக அமையப் போகின்றது. எனவே இப்போட்டித் தொடரில் எதிர்பார்க்கப்பட்ட பல அணிகள் பின்னடைவைக் கண்டுள்ள நிலையில், இம்முறை ஐரோப்பியக் கிண்ணத்தைக் கைப்பற்றப் போகும் அணி எது என்பதை ஊகிக்க முடியா துள்ளது.

பன்னிரெண்டாவது தடவையாக நடைபெறும் ஐரோப்பிய கிண்ணக் கால்பந்துப் போட்டியில் அதிகபட்சமாக ஜேர்மனி மூன்று தடவைகளும் (1972,1980,1996), பிரான்ஸ் இரண்டு தடவைகளும் (1984,2000), இத்தாலி ஒரு தடவையும் (1968), ஸ்பெயின் ஒரு தடவையும் (1964), சோவியத் யூனியன் ஒரு தடவையும் (1960) செக்கோசெலவாக்கியா ஒரு தடவையும் (1976), நெதர்லாந்து ஒரு தடவையும் (1988) டென்மார்க் ஒரு தடவையும் (1992) கைப்பற்றியுள்ளன.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# உழைப்புக்கு உரியபயனை பெறமுடியாது தவிக்கும் கடற்றொழிலாளர்

இயற்கையுடன் போராடித் தம் வாழ்க்கையை ஓட்டும் முல்லைக் கரையோரக் கடற்றொழிலாளர்களுக்கு சமாதான சூழல் ஏற்பட்டு மூன்று வருடங்களாகியும் அதன் பயன்கள் இன்னமும் தொடுவானம் போல் தள்ளித் தள்ளியே சென்று கொண்டிருக்கின்றது.

இதுவரை காலமும் அனுபவித்த துன்பங்கள் நீங்கி தம்வாழ்வில் வசந்தம் வீசும் என எதிர்பார்த்த இவர்களுக்கு முன்னரிலிருந்து சற்று ஆறுதல் கிடைத்திருக்கிறதே தவிர பெரும் முன்னேற்றம் எதுவும் அவர்களுடைய வாழ்வில் ஏற்பட்டுவிடவில்லை.

இவர்கள் தொழில் ரீதியாக இதுவரை முன்னேற்றகரமான நிலையைக் காணாது தினமும் கடலுடன் தமது பாரம்பரிய கருவிகளுடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள். தமது தொழில் அபிவிருத்தி காண வேண்டும். தாமும் ஏனையபகுதி மீனவர்கள் போல் எவ்விதத்தடையும் இன்றி நவீன உபகரணங்களுடன் கடலில் மீன்பிடிக்க



வேண்டும் என்பது தான் அவர்களது எதிர்பார்ப்பாக இருக்கிறது.

யுத்தகாலத்தில் காணப்பட்ட தடைகள் இப்போது ஓரளவு தளர்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றைப் பயன்படுத்துவதற்கு நலிவுற்றிருக்கும் இந்தக்கரையோர மக்களால் இயலாமல் இருக்கிறது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னான அடக்குமுறை காலப்பகுதியில் கடலில் கால் வைக்க முடியாது தவித்த இந்த மக்கள் இப்போது ஓரளவு கடலில் சென்று மீன் பிடிக்கக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. அவ்வாறு பிடிக்கப்படுகின்ற மீன்களை உள்ளூரில் உள்ள மக்களின் தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தினால் அவர்களால் பெரிதாக இலாபம் ஈட்டிவிட முடியாது. சண்டைக்காலத்தில் கடற்படையின் தாக்குதல்களில் சிக்கி பயத்தின் மத்தியில் தமது உயிர்களைக்கூட தொழிலுக்காக பலிகொடுத்து பிடிக்கின்ற சொற்ப மீன்கள் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்வதற்கு மாத்திரமே போதுமானதாக இருந்தது. ஆனால் தற்போது உருவாகியுள்ள அமைதிச்சூழ்நிலையைப் பயன்படுத்தி இவர்களால் முன்னரைவிட சற்று அதிகமான மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அதனை வெளிச்சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் தான் இவர்களால் சற்று அதிக வருமானத்தைப் பெறமுடியும்.

இந்நிலையில் தான் மிகவும் வறுமைப்பட்டு நலிவுற்று பின்தங்கிய நிலையில் வாழ்கின்ற இவர்கள் வெளியூர் சந்தைகளுக்கு மீன்களை ஏற்றுமதி செய்யமுற்படுகின்றனர்.

இப்போது தான் இங்கே பிரச்சினை உருவாகிறது. மீன்களை கொழும்பு போன்ற இடங்களிற்கு நீண்டதூரம் கொண்டு செல்வது என்றால் மீன்கள் பழுதடையாமல் பாதுகாத்துக்கொண்டு செல்வதற்கு 'ஐஸ்' தேவைப்படுகிறது. ஐஸ் இட்டுப்பக்குவமாக மீனைக்கொண்டு செல்வதற்கான வாகனங்களை அவர்கள் ஓரளவு பெற்றுக்கொண்டாலும் இதற்கான ஐஸ் இங்கே பெற முடியாத நிலை காணப்படுகிறது. அதனை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகள் முல்லை.மாவட்டத்தில் எங்கேயும் இல்லை. அதற்கான இயந்திரங்கள் கூட எவையும் இல்லை. அத்தகைய ஐஸ் தொழிற்சாலைகளை அமைத்துத் தருவதற்கும் அரசு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத நிலை காணப்படுகிறது. அரசாங்கம் காட்டும் அதே நிலைப்பாட்டையே அரசசார்பற்ற நிறுவனங்களும் இவ்விடயத்தில் கையாளுவதாக இந்த மக்கள் கருதுகின்றார்கள் இதனால் அரசு மீதும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மீதும் பெரும் விசனமடைந்திருக்கிறார்கள்.

முன்னைய காலத்தில் நான்கு ஐஸ் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் இங்கு இயங்கிவந்தன இவை நான்கிலும் நாள் ஒன்றிற்கு ஆயிரத்துக்கும் அதிகமான கிலோ ஐஸ் உற்பத்தி செய்யப்பட்டது. அதுமட்டுமன்றி மேலதிகமாகவும் வேறு ஐஸ் தொழிற்சாலைகளில் இருந்தும் நான்கு, ஐந்து வாகனங்களில் பெருமளவான ஐஸ் கொண்டு வரப்பட்டது. இதனால் மீனவர்கள் பெரும் பயனடைந்து வந்தனர்.

ஆனால் அவை அனைத்தும் பின்னாளில் இராணுவ நடவடிக்கையால் முற்றாகத் தகர்க்கப்பட்டும், நிறுத்தப்பட்டும் விட்டன. இந்த நிலையில் தற்போது இங்கிருந்து மீன்களை ஏற்றிச் செல்கின்ற வாகனங்களில் தான் ஐஸ் கொண்டுவரப்படுகிறது. அதனால் இரண்டு வாகனங்களில் தான் மீன் கொண்டு செல்லப்படுகின்றன.

இவ்வாறு பெரும் சிரமங்களின் மத்தியில் மீனை ஏற்றிக் கொண்டு செல்லும் போது புளியங்குளம் இராணுவ சோதனை நிலையத்தை 3.30 மணிக்கிடையில் கடந்து விடவேண்டும். இல்லையேல் இராணுவம் உள்நுளைய அனுமதிக்கமாட்டாது. இந்த நிலையில் அதனுள் போடப்பட்ட ஐஸ் மறு நாள் வரை போதாதநிலையில் அத்தனை மீன்களும் பழுதடைந்து விடுகின்றன. முல்லைத்தீவில் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை ஏதாவது இருந்தால் அவற்றைப் பாதுகாக்கமுடியும். அதுவும் இல்லாத நிலையில், இராணுவத்தால் வவுனியாவிற்குள் செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் அவ்வளவு மீன்களும் பழுதடைந்து விடுகின்றன. இதனால் பெரும் நஷ்டம் ஏற்படுகின்றது.

சமாதானம் பிறந்து மூன்று வருடங்களில் ஆறு தடவைக்கும் மேல் இப்படியான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இதனால் 3கோடி ரூபாவுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதனால் இங்கே கடற்கரையில் காலை 10.00 மணிக்கு முன்னர் பிடிக்கப்படுகின்ற மீன்களை மாத்திரமே கொண்டு செல்ல முடிகிறது. அது அரைவாசியானாலும் சரி, கால்வாசி ஆனாலும் சரி கிடைப்பதுடன் புறப்பட்டு விடுகிறது. அதன் பின்னர் வருகின்ற மீன்கள் அனைத்தும் கருவாடு போட வேண்டிய நிலையே உருவாகிறது. காலை 11.00 மணிக்கு இங்கிருந்து புறப்படும் பட்சத்தில் தான் புளியங்குளம் ஓமந்தை இராணுவ சோதனை நிலையத்தைக் குறித்த நேரத்தில் அடையமுடியும்.

இதைவிட 'ஐஸ்' இடப்பட்டு ஏற்றிச் செல்லும் மீன்களை ஓமந்தையில் உள்ள இராணுவத்தினர் முற்றிலுமாக கீழே இறக்கிச் சோதனை செய்கிறார்கள். இதனாலும் மீன்கள் பழுதடைகின்றன.

பரந்து விரிந்த கடலில் உடலை வருத்தி இரவைப் பகலாக்கி தொழில் செய்து பிடித்த மீன்களை ஓமந்தையில் உள்ள இராணுவத்தின் அடாவடித்தனத்தால் கொழும்பில் கொண்டு சென்று எவருக்கும் பயன்பட முடியாத நிலையில் கொட்டிவிட வேண்டிய துன்பமான நிலையைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கை காரணமாக மீனவ சமூகம் எதிர் கொள்ளும் நெருக்கடிகள் பற்றி பலதரப்பினருக்கும் முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் ஊடாக தெரியப்படுத்தப்பட்டது. மேற்படி விடயம் அரச அதிபா ஊடாகவும் அரச தரப்புக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவரால் இதற்கான சரியான தீர்வை பெற்றுத் தரமுடியவில்லை. அது பாதுகாப்பு அமைச்சின் விடயம் ஆனால் நான் உங்கள் பிரச்சினையை அவர்களிடம் தெளிவுபடுத்த மட்டுமே முடியும் என அவரும் கை விரித்து விட்டார். இந்த நிலையில் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு ஊடாக அரச தரப்புக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர்களும் மீனவர்களின் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் பூரண அக்கறை காட்டவில்லை. அவர்களாலும் இந்த மீனவ சமுதாயத்தின் பிரச்சினையைத் தீர்க்கமுடியவில்லை.

இந்த நிலையில் இராணுவம் இவர்கள் மீது பிரயோகிக்கின்ற அழுத்தங்களை நீக்கி மீன்களை ஏற்றிச் செல்கின்ற வாகனங்களை பயணிக்க அனுமதி மறுக்காது தொடர்ந்து செல்ல அனுமதிக்க வேண்டும். அதேவேளை மீன்களைச் சோதனை என்ற பெயரில் கொட்டிச்சிந்திப் பார்த்து மீன்களைப் பழுதடையவைப்பதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் மீனவர்களின் நலனைக்கருத்தில் கொண்டு அவர்களின் வருவாயை அதிகரிப்பதற்கு 'ஐஸ்' தொழிற்சாலையை முல்லைத்தீவில் நிறுவி தற்போது கிடைத்திருக்கின்ற இந்த சமாதானத்தை இந்த மக்களுக்கு ஒருவகையிலாவது அர்த்தமுடையதாக மாற்ற வேண்டும் என்பது இம்மக்களின் விருப்பமாகும்.

அ.லோகேசன்

## விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கல்

(கண்டாவளை)

சமுதாய முன்னேற்ற நிலையமும், கெயார் நிறுவனமும் இணைந்து விசுவமடு குமாரசாமிபுரம கிராமத்தில் மிகவும் வறிய 40 விவசாயக் குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு குமாரசாமிபுரம் பொது நோக்கு மண்டபத்தில் சமுதாய முன்னேற்ற நிலைய இணைப்பாளர் வ.கமலநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வின் மங்கல விளக்கை கெயார் திட்டப்பணிப்பாளர் கணேஸ், கிராமசேவகர் சேகர் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியைக் கண்டாவளைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் நஜீம் ஏற்றினார். வரவேற்புரையை பிரதேச த.பொ.மே.நி. இணைப்பாளர் காசிநாதன் நிகழ்த்தினார்.

கருத்துரைகளை கெயார் நிறுவனத் திட்ட இணைப்பாளர், கிராமசேவை கண்டாவளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.பத்மநாதன், கெயார் நிறுவன வெளிக்கள அலுவலர் செல்வி.சிபிலா, த.பொ.மே.நி.விவசாயப்பகுதி யோகன்ராசா ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு.சு.வீரப்பன் நிகழ்த்தினார். மேற்படி 40 குடும்பங்களில் 05குடும்பங்களைக்கொண்ட குழு ஒன்றுக்கு ஒரு நீர் இறைக்கும் இயந்திரம் வீதம் வழங்கப்பட்டது. இதே வேளை மேற்படி நிறுவனங்கள் கடந்த ஆண்டு இக்கிராமத்து விவசாயிகளின் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் 79 விவசாயக் கிணறுகளை ஆழமாக்கிக் கொடுத்ததுடன், இங்கு பொது நோக்கு மண்டபம், பொதுக்கிணறு என்பனவற்றையும் கட்டிக்கொடுத்தனர். இதே வேளை இங்கு 27 பயனாளிகளுக்கு வியாபாரக் கடனாக ஐந்து லட்சத்திப்பத்தாயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (14)

## கரும்புலிகள் நாளை முன்னிட்டு வலய ரீதியாக சிரமதானப்பணி

(முள்ளியவளை)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் முள்ளியவளைப் பிரதேசத்தில் வலய ரீதியாக சிரமதானப்பணி நடைபெற்று வருகின்றது. 19.06.2004 அன்று நீராவிப்பிட்டிப் பகுதிப் பொதுமக்கள் கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவ, மாணவிகளினால் முள்ளியவளை மாவீரர் மண்டப வளா[illegible]வீரர் துயிலும் இல்ல வளாகம் என்பன சிரமதானப் பணிமூலம் து[illegible]ரவு செய்யப்பட்டுள்ளது. (ஆ)

## கல்மடு அ.த.க பாடசாலைக்கு தென்னங் கன்றுகள் வழங்கல்

(வட்டக்கச்சி)

புங்குடுதீவு அருள்மிகு தெய்வக் குழந்தைகள் இல்லத்தில் பாடசாலைகளை வனப்பாக்கல் திட்டத்தின் கீழ் கிளி.கல்மடுநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சு.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு கிளிநொச்சி அரச அதிபர் சி.இராசநாயகம் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.வைரமுத்து ஆகியோர் மங்கல விளக்கினை ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியினை வட்டக்கச்சி பிரதேசப் பொறுப்பாளர் சி.இராமஜெயம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பாடசாலை நலன் விரும்பி ச.செல்லத்துரை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.தனிநாயகம், கண்டாவளை உதவி அரச அதிபர் சிவசொரூப நாதபிள்ளை, கிளிநொச்சி அரச அதிபர் சி.இராசநாயகம் ஆகியோர் தென்னங்கன்றுகளை வழங்கி உரையாற்றினர். நன்றி உரையினைப் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலர் ஆ.நவரத்தினம் நிகழ்த்தினார். (12)

## 2 ஆம் ஆண்டு நிறைவு விழா

அளம்பில் பிரதேசத்தில் அமைந்துள்ள தியாகதீபம் திலிபன் மருத்துவ சேவை நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 24ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு சிகிச்சை நிலைய வளாகத்தில் நடைபெறவுள்ளது. (20)

# இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு இதுவரை எந்த வகையிலுமே உதவவில்லை

## இ.தொ.கா.பா.உ.புத்திரசிகாமணி

(கொழும்பு)

இந்திய அரசாங்கம் தமிழர்களுக்காக இதுவரை எந்தவகையிலுமே உதவவில்லை என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் வி.புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார்.

அவர் தனியார் தொலைக்காட்சியொன்றிற்கு அளித்த செவ்வியில் மேலும் கூறுகையில்,

இந்திய அரசாங்கம் மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஜாதிக ஹெல உறுமயவிற்கும் உதவுகிறது. எமக்கு எந்த வகையிலும் உதவவில்லை.

இந்தியா இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு ஆதரவு அளிப்பதாக நான் நினைக்கவில்லையென கூறியஅவர், கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் ஈழப்போராட்டத்திற்கும் ஆதரவு அளித்திருப்பினும் இலங்கை அரசாங்கம் ஒரு உறுதியான அரசாங்கமாக இருக்கக்கூடாது என்பதற்காகவே அப்போது செயற்பட்டுள்ளார்கள். என்றும் தமிழர்களுக்காக இந்திய அரசாங்கம் எதனையும் செய்ய வில்லை எனவும் அவர் இந்திய அரசாங்கத்தை குற்றம் சாட்டியுள் ளமை குறிப்பிடத்தக்கது.


-பாராளுமன்றத்தில் பிக்குமார்-

# தாக்கப்பட்டமைக்கு எதிராக கொழும்பில் சத்தியாக்கிரகம்

கடந்த பாராளுமன்ற அமர்வின்போது பௌத்தபிக்குகள் ஆளும் கட்சியினரால் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் சத்தியாக்கிரகம் ஒன்று இராஜகிரியவில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சத்தியாக்கிரகத்தினை ஜாதிக ஹெல உறுமய கட்சியின் கோட்டை அமைப்பாளர்கள் ஒழுங்கு செய்திருந்தனர்.

புத்தசாசனத்திற்கே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் இந்தச் சம்பவம் தொடர்பாக நாட்டின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் புத்தசாசன அமைச்சர் ஆகியோர் அனைத்துச் சங்க நாயக்கர்களிடமும் மன்னிப்பு கோரவேண்டும் எனவும் கேட்டுள்ளதுடன் அதுவரை தாம் செயற்திட்டங்களை முன்னெடுத்து மக்களுக்கு தெளிவுபடுத்தப்போவதாகவும் தெரிவித்த அவர்கள் இதை அரசியல் விடயமாக்கி மூடி மறைக்கத் தாம் இடம்கொடுக்கப்போவதில்லை எனவும் அச் சத்தியாக்கிராகத்தின்போது வலியுறுத்தியுள்ளனர். அத்துடன் தேரரின் தேக ஆரோக்கியத்திற்காக சமய வழிபாடும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 08 - 03 - 1939 |  | 24 - 05 - 2004 |

23 - 06 - 2004

**அமரர் உயர்திரு. செல்லையா - பொன்னுத்துரை**

(ஓய்வு பெற்ற நில அளவையாளரும், வடபகுதி மாற்றுச்சபை உறுப்பினரும்)

*எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்,*
*அம்மையப்பனாய் வாழ்ந்து – அன்புடனே*
*எமை ஆளாக்கிய அன்புத் தெய்வமே*
*நாட்கள் முப்பத்தியொன்றுபோனாலும் – உம்*
*நினைவு எமைவிட்டு அகலா –*

23.06-2004 புதன்கிழமை அன்று எமது இல்லத்தில் இடம் பெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ-512A
அக்கராயன்குளம். (4725)

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# இலங்கைக் கடல் எல்லைக்குள் வெளிநாட்டவர் மீன்பிடிக்கத் தடை

## அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க

(கொழும்பு)

இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன் பிடிப்பதற்கு எந்தவொரு வெளிநாட்டுப் படகுகளையும் அனுமதிக்க முடியாதென சிறிலங்கா மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது கைப்பற்றப்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகளை அரசுடமையாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், இதுவரை 54 மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் மீன்பிடி அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இலங்கைக் கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டவேளை கைப்பற்றப்பட்ட படகுகள் காரை நகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடியில் ஈடுபடும் வெளிநாட்டுப் படகுகள் இலங்கையின் துறைமுகங்களில் தரித்து நிற்பதற்கு மட்டும் அனுமதி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜே.வி.பி., சுதந்திரக்கட்சி மக்களை ஏமாற்றியே பதவிக்கு வந்துள்ளன

## ஐ.தே.க. பா.உ. ராஜிதசேனாரட்ண

ஜே.வி.பி.யும், சனாதிபதியின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் மக்களை ஏமாற்றியே பதவிக்கு வந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளார். ஏற்கனவே ஐக்கிய தேசியக்கட்சி நீர் முகாமைப் பிரேரணையைக் கொண்டு வந்தபோது இந்த இருகட்சிகளும் இந்தப் பிரேரணையை விமர்சித்தன. அதேபோல் நட்ட ஈட்டுச் சூத்திர முறையையும் இந்த இருகட்சிகளும் விமர்சித்தன. தாம் ஆட்சிக்கு வந்தால் இந்த இருபிரேரணைகளையும் ரத்துச் செய்வோம் எனக்கூறின.

ஆனால் தற்போது இந்த இரு கட்சிகளும் இந்த இருபிரேரணைகளிலும் சீர்திருத்தம் செய்யப் போவதாகக் கூறியுள்ளன. எனவே இதன் மூலம் இந்த இருகட்சிகளும் மக்களை ஏமாற்றுகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

# கேள்வி அறிவித்தல் (I.F.B)

## நிர்மாண வேலைகள்

**ஐ.எவ்.பி.இல:- கே.என்/ஜேபிஐசி/எச்டபிள்யூ/01**

01) நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம்-8 இலும், தரம்-7இலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து மாவட்ட கேள்விச்சபை தலைவரினால் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட வேலைகளுக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

02) கீழே குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (DRAFT) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி,மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடம் இருந்து 05.07.2004 (வியாழக்கிழமை)ந் திகதி பி.ப.3.00 மணிவரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03) ஒப்பந்தப்பத்திரங்களை பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04) கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும். ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாக பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

05) சமர்ப்பிக்கப்படும் கேள்விகள்,கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க அதிபர்,கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தலைவர், கேள்விச்சபை, மாவட்ட செயலகம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2004.07.12ஆம் (திங்கட்கிழமை) திகதி மு.ப.10.30 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம்.

06) வேறு விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல கேள்வி விபரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | நிறைவேற்ற வேண்டிய காலம் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 01) நிர்மாணம்- பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் கட்டம்-11, கிளிநொச்சி. KL/JBIC/HW/01 | எம்7 | 42,000.00 | 6மாதம் | 1,000.00 |
| 02) நிர்மாணம்-சுகாதார வைத்தி அதிகாரிஅலுவலகம்,கட்டம்-11 கிளிநொச்சி KL/JBIC/HW/02 | எம்8 | 20,000.00 | 4மாதம் | 1,000.00 |

**தி.இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி.**

(சி9730)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1948 - 09 - 26 |  | 2004 - 05 - 23 |

அமரர்

# திருமதி சரஸ்வதி செல்வராசா

கடந்த (23-05-2004) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த திருமதி சரஸ்வதி செல்வராசா அவர்களின் சிவபதப் பேறுகுறித்து 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை 22-06-2004 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால்இவ்வைபவத்தில் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சாமிப்புலம், நல்லூர்,*
*பூநகரி.* (4727)


**பிள்ளைகள், மருமக்கள்.**

# பாக்.இந்திய வெளியுறவு அமைச்சர்களின் உறவுகளை மேம்படுத்த உத்வேகம் அளிக்கும்

(புதுடில்லி)

**பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்சித் முகமத் கசூரியை இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் இன்று சீனாவில் சந்தித்துப் பேசவிருக்கிறார். இந்தப் பேச்சுக்கள் இந்தியா பாகிஸ்தான் உறவுகளைச் சகஜமாக்கும் முயற்சிகளுக்கு உத்வேகம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது மன் மோகன்சிங் அரசு பதவியேற்ற பிறகு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெறவிருக்கும் முதலாவது உயர் மட்டப் பேச்சுக்களாகும்.**

இது இவ்வாறிருக்க டட்லியா அனல்மின்திட்டம் பற்றி நேற்று முதன் முறையாகச் செயலர்கள் நிலையில் பேச்சுக்கள் நடத்தினர். ஜம்மு காஷ்மீரில் செலாப் நதியின் மீது அமைக்கப்பட்டுவரும் இந்த மின்திட்டம் சம்பந்தமான கருத்து வேறுபாடுகளை நீக்க இந்தப் பேச்சுக்கள் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணுவாயுத அச்சத்தைப் போக்கி பரஸ்பரம் நம்பிக்கையை வளர்ப்பது சம்பந்தமாக டில்லியில் கடந்த இரு வாரங்கள் நடைபெற்ற நிபுணர்கள் நிலைப் பேச்சுக்கள் குறித்து பாகிஸ்தான் திருப்தி வெளியிட்டிருக்கிறது. இது பற்றி நேற்று முன்தினம் டில்லிப் பேச்சுக்களுக்குப் பின் வெளிநாட்டுச் செய்தியாளர்களிடையே பேசிய செய்தித் தொடர்பாளர் மசூத்கான் இரு நாடுகளும் சரியான பாதையில் செல்வதாகக் கூறியுள்ளார். இருப்பினும் உடனடியாக உச்சி மாநாடு நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை எனவும் அவர் கூறினார்.



புதுடில்லியில் இந்திய வெளிநாட்டமைச்சரின் அலுவலகத்தில் பேச்சு நடத்தும் பாகிஸ்தானின் பதில் வெளிநாட்டமைச்சர் தாரிக் ஒஸ்மான ஹைதீர்,இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் அஸிஸ் அகமட் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் ஆகியோர்.

# குற்றவழக்கில் தொடர்புடைய அமைச்சர்களை நீக்கக்கோரி பா.ஜ.க.ஆர்ப்பாட்டம்

குற்ற வழக்குகளில் தொடர்புடைய அமைச்சர்களை நீக்கக் கோரி நேற்றுத் தென்சென்னை மாவட்டத்தில் உள்ள மைலாப்பூரில் பாரதிய ஜனதாக் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் தேசியச் செயலாளர் இல. கணேசன் தலைமை வகித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்களை மத்திய அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என்று கோரியதுடன் பெற்றோல், டீசல் விலையைக் குறைக்க வேண்டும் என்பது தொடர்பான கோசங்களையும் எழுப்பியமை குறிப்பிடத்தக்கது.

# நரேந்திர மோடியைப் பதவி நீக்குவதில்லை பா.ஜ.க செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானம்

## - மோடியின் எதிர்ப்பாளர்கள் அதிருப்தி

டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாரதிய ஜனதாக்கட்சி ஆட்சி மன்றக் கூட்டத்தில் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியை இப்போதைக்கு நீக்குவதில்லையென முடிவு செய்யப்பட்டது. ஆனால், இந்த முடிவு பா.ஜ.க.வில் உள்ள மோடியின் எதிர்ப்பாளர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மோடியை நீக்க வேண்டுமென்றே அவர்கள் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றனர் இந்நிலையில் பா.ஜ.க. தேசிய செயற்குழுக்கூட்டம் மும்பையில் இன்று தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறுகின்றது. இது தொடர்பாக நேற்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க. பொதுச் செயலாளர் பிரமோத் மகஜர் செயற்குழுவிற்கு வெளியே சிவசேனாத் தலைவர்களை வாஜ்பாய் உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள் சந்தித்து மகாராஷ்டிர சட்டசபைத் தேர்தல் கூட்டணி குறித்து பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவித்தார்.

# திரைப்பட நடிகர் எஸ்.வி.சேகர் அ.இ.அ.தி.மு.கழகத்தில் இணைந்துகொண்டார்

பிரபல திரைப்பட நடிகர் எஸ்.வி.சேகர் நேற்று தன்னை அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்தும் கொண்டார்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் சந்தித்துத் தன்னைஅனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்ற கழகத்தின் அடிப்படை உறுப்பினராக இணைத்துக்கொண்டார்.

# தெலுங்கு திரைப்படத் தயாரிப்பாளர் சுடப்பட்ட வழக்கு நடிகர் பாலகிருஸ்ணாவுக்கு காவல் நீடிப்பு

தெலுங்கு திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் அவரது உதவியாளர் சுடப்பட்ட வழக்கில் நடிகர் பாலகிருஸ்ணாவுக்கு மேலும் பதினைந்து நாட்களுக்குக் காவல் நீடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து உடல் நலம் பாதிக்கப்பட்ட பாலகிருஸ்ணா தொடர்ந்து மருத்துவர்களின் கண்காணிப்பில் இருந்து வரும் நிலையில் இவரது நீதிமன்றக் காவல இன்றுடன்முடிவடைகிறது இதையடுத்து ஹைதராபாத் நீதிமன்றம் பாலகிருஸ்ணாவின் காவலை வரும் ஐந்தாம் திகதிவரை நீடித்து உத்தரவிட்டது. இதனிடையே நடிகர் பாலகிருஸ்ணா நன்கு குணமடைந்து விட்டதால், அவரை மருத்துவரின் கண்காணிப்பிலிருந்து விடுவித்து தங்கள் வசம் ஒப்படைக்க வேண்டுமென ஹைதராபாத் நகர காவல் துறையினர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர். இம்மனு மீதான விசாரணை நாளை நடைபெறவுள்ளது.


# கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்

## இரண்டாவது நாள்

### மிதிவெடிகளும், வெடிபொருட்களும் உள்ள இடங்களில் உங்களை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளலாம்?

- உங்களது கிராமத்தினைப் பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ளுங்கள்.
- வேலியிடப்பட்ட இடங்களையும், ஆபத்தான பகுதிகளையும் இனங்கண்டு கொள்ளுங்கள்.
- பல இடங்களில் மிதிவெடி வயல்களுக்கு இன்னும் வேலியிடப்படவில்லை என்பதை மறவாதீர்கள்.
- பாவிக்கப்படாதுள்ள பாதைகளில் பிரயாணம் செய்யாதீர்கள்.
- மிதிவெடி வேலியிடப்பட்ட பகுதிகளினுள் எக்காரணம்கொண்டும் நுழையாதீர்கள்.
- மீளக் குடியமரும்போது குழந்தைகளை உடன் எடுத்துச் செல்லாதீர்கள்.
- உறங்கும் நிலையில் உள்ள வெடிபொருட்கள் எந்நேரமும் வெடிக்கும் என்பதை மறவாதீர்கள்.
- காணிகளைத் துப்புரவு செய்து தீயிடும்போது மிகவும் அவதானத்துடன் செயற்படுங்கள்.
- ஒருவர் பாதிக்கப்படுவதால் அக்குடும்பம் முழுவதுமே பாதிப்புக்குள்ளாகின்றது என்பதை மறவாதீர்கள்
- உங்கள் கருத்துக்களையும் தேவைகளையும் வெண்புறா தொடர்பகத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

யுனிசெவ் வெண்புறா-வன்னி

(சி.9731)

## விவ்வியன் ரிட்ச்சட் இராஜினாமா

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் தேர்வாளர் குழுத் தலைவராக இருந்த முன்னள் அணித்தலைவர் விவ்வியன் ரிச்சட் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.



பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலி வர்ணனையாளராக அவர் இணைந்து கொள்வுள்ளதால் இந்தப் பதவியை தான் இராஜினாமாச் செய்திருப்பதாக ரிச்சட் தெரிவித்துள்ளார்.

இதனால் மிக முக்கியமான தேர்வாளர் ஒருவரை மேற்கிந்திய தீவுகள் இழந்துள்ளது என்றே கூறலாம்.

இந்நிலையில் இடைக்காலத் தேர்வாளர் ஒருவர் மேற்கிந்தியத் தீவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

### - ஐரோப்பியக் கிண்ண கால்பந்துப் போட்டி -

# போத்துக்கல், கிரீஸ் அணிகள் கால் இறுதிக்கு தெரிவு

## ஸ்பெயினுக்கு அதிர்ச்சி; ரஷ்யாவுக்கு ஆறுதல் வெற்றி



ஐரோப்பிய கோப்பை கால்பந்து போட்டியின் ஒன்பதாம் நாளான நேற்றுமுன்தினம் ஸ்பெயின் அணியை தோற்கடித்த போர்த்துக்கல் அணி கால் இறுதிக்கு முன்னேறியது.

போர்த்துக்கல் நாட்டில் நடைபெற்றுவரும் ஐரோப்பியக் கிண்ண கால்பந்து போட்டியில் ஸ்பெயின் போர்த்துக்கல் வீரர்கள் பலப்பரீட்சை நடத்தினர்.

இப் போட்டியில் வெற்றிபெற்றால் மாத்திரமே கால்இறுதிச்சுற்றுக்கான வாய்ப்பைப் பெறமுடியும் என்ற கட்டாயத்தில் இருந்த இரு அணிவீரர்களும் வெற்றிக்காக கடுமையாகப் போராடினர்.

இருப்பினும் இரு அணிகளும் தடுப்பாட்டத்தில் அதிக ஆர்வம் காட்டியதால் முதற் பாதி ஆட்ட நேரமுடிவின் போது இரு அணிகளும் கோல் எதனையும் பெற முடியவில்லை.

பின்னர் போட்டியின் இரண்டாவது பாதியில் ஆட்டத்தின் போக்கை திசைமாற்றும் வகையில் போர்த்துக்கல் வீரர்கள் கோல் ஒன்றைப் போட்டு ஸ்பெயின் அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தினர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஸ்பெயின் வீரர்களின் கோல் அடிக்கும் நிர்ப்பந்த முயற்சி பலனளிக்காததால் போர்த்துக்கல் அணி 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு முன்னேறியது. இதேவேளை மற்றொரு இறுதி லீக் போட்டியில் தோல்வியுற்ற கிரீஸ் அணி கால் இறுதிப்போட்டிக்கு வரலாற்றில் முதல் தடவையாக தகுதி பெற்றது பாறோ நகரில் நடைபெற்ற மேற்படி பரபரப்பான போட்டியில் கிரீஸ் 1-2 என்ற கோல் கணக்கில் ரஷ்யாவிடம் தோற்றுப்போனது.

இருந்த போதிலும் ஏற்கனவே நடந்த இரண்டு போட்டிகளில் ஒன்றில் வெற்றி பெற்றதால் கிரீஸ் முதல் தடவையாக கால் இறுதிக்குள் நுழைந்தது.



போத்துக்கல் வீர் செலுத்திய பந்தை ஸ்பெயின் பந்து தடுப்பாளர் (Goal-Kecper) ஐக்கர்கசிலஸ் தடுக்கும்காட்சி.

இம்முறை கால் இறுதிக்கு தகுதி பெற முடியாது போன ரஷ்யாவுக்கு மேற்படி போட்டி ஆறுதல் வெற்றியாக அமைந்தது.

## வெற்றி வாய்ப்பை இழந்த இத்தாலி



• இத்தாலியின் நட்சத்திர வீரரான டோட்டி போட்டி ஒன்றில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதே இத்தாலி அணி சுவீடனுக்கு எதிரான போட்டியில் வெற்றி வாய்ப்பை இழந்ததற்குக் காரணமாக அமைந்து விட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலி டென்மார்க்கிற்கிடையிலான முதலாவது லீக் போட்டி சமநிலையில் முடிந்ததால் வெறுத்துப்போன டோட்டி டென்மார்க் வீரர் கிஸ்ரியன் பால்சன் முகத்தில் துப்பி விட்டார்.

இதனைத் தொலைக்காட்சியில் பார்த்த போட்டி அமைப்பாளர்கள் அவரை அடுத்த மூன்று போட்டிகளில் விளையாடத் தடை விதித்தனர்.

இதனால் சுவீடனுக்கு எதிரான இரண்டாவது லீக் போட்டியில் டோடடியால் பங்கேற்க முடியவில்லை.

ஒருவேளை இவர் அணியில் இருந்திருந்தால் இத்தாலி சுவீடனை வென்றிருக்கும்.

எனவே இத்தொடரில் இத்தாலி அரையிறுதி வாய்ப்பைப் பெற்றால மாத்திரமே டோட்டியின் ஆட்டத்தை ரசிகர்கள் ரசிக்க முடியும்.

### –ஐரோப்பிய கிண்ண கால்பந்துப் போட்டி –

## போத்துக்கல், கிரீஸ் அணிகளின் வெற்றி அந்நாடுகளில் கோலாகலக் கொண்டாட்டம்

ஐரோப்பியக் கோப்பைக்கான கால்பந்துப் போட்டியில் கால் இறுதிக்கு முதல் முறையாகத் தகுதி பெற்றுள்ள கிரீஸ் நாட்டில் கோலாகலக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பிடித்ததால் கிரீஸ் முதல்முறையாக இப் போட்டியின் கால் இறுதிக்குத் தகுதி பெற்றது.

இதனை கிறீஸ்நாட்டு மக்கள் எல்லையில்லா அளவுக்குக் கொண்டாடி வருகின்றனர். அந்நாட்டின் தலைநகர் எதென்சில் வீதிகள் தோறும் ரசிகர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இதேபோல் போட்டியை நடாத்தும் போத்துக்கல் இரண்டு வெற்றிகள் மூலம் கால் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றிருப்பதால் அந்நாட்டு மக்கள் இதனை ஒரு தேசியப் பண்டிகை போல் கொண்டாடி வருகின்றனர்.



மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் போர்த்துக்கல் ரசிகர்கள்.

இப்போட்டியின் தொடக்க ஆட்டத்தில் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் விளையாடிய போர்த் துக்கல்லை அதிர்ச்சித் தோல்வியைச் செய்த கிரீஸ் ஸ்பெயினையும் வீழ்த்தித் தனது பலத்தை நிருபித்தது.

ரஷ்யாவிடம் அந்த அணி தோல்வி அடைந்த போதிலும் A பிரிவில் இரண்டாம் இடத்தை

## ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டை இணைக்குமாறு ஐ.சி.சி. வேண்டுகோள்

ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டைச் சேர்த்துக்கொள்ளுமாறு சர்வதேச கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

உலகின் அனைத்து நாடுகளும் கலந்து கொள்ளும் ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட்டையும் சேர்க்க வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் சார்பில் சர்வதேச ஒலிம்பிக் சங்கத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இங்கிலாந்தில் கிரிக்கெட் 20 என்ற பெயரில் 20 ஓ்வர்கள் கொண்ட விரைவான மோதல் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் போட்டிக்கு இங்கிலாந்தில் நல்ல வரவேற்புப் பெற்றுள்ளது.

எனவே ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டைச் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.






ஐரோப்பியக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியின் ஞாபகார்த்தமாக பிகானீரில் (ராஜஸ்தான்) தனது வீட்டு மொட்டை மாடியில் கால்பந்து ரசிகர் ஒருவர் வடிவமைத்துள்ள தண்ணீர் தாங்கி

## பாகிஸ்தானின்புதிய பயிற்சியாளராக இங்கிலாந்தின் போம்குளுன்னர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக இங்கிலாந்தின் போம்குளுன்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 1994ஆம் ஆண்டு தொடக்கம்1999ஆம் ஆண்டு வரை தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்தவர். கட்ந்த வாரம் இது தொடர்பாக ஆராயப்பட்டு இப்போது நியமனம் இடம்பெற்றுள்ளது. அடுத்த மாதம் சிறிலங்காவில் இடம்பெறவுள்ள ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இவரே அணியின் பயிற்சியாளராகக் கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக இருந்த மியாண்டாட் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## எதிர்காலத்தில் சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கு வீரர்கள் தெரிவில் புதிய கொள்கை அறிமுகம்

எதிர்காலத்தில் சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கு புதிய வீரர்களைத் தெரிவு செய்யும் போது புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படும் என முன்னாள் ஆரம்பத்துடுப்பாட்ட வீரரும் தெரிவுக் குழுத்தலைவருமான அசந்தா டிமெல் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கும் போது; எதிர்வரும் 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப்போட்டிகளில் பங்கேற்கப் பலம் வாய்ந்த அணியொன்றை உருவாக்குவதே தமது இலக்கு என்றும் தற்போது "ஏ" அணியில் விளையாடும் திறமைமிக்க வீரர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு மேலும் சிறந்த முறையில் பயிற்சியளிக்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வெளிமாகாணங்களில் உள்ள வீரர்களுக்கு வார இறுதி நாட்களில் பயிற்சியளிக்கவென முகாம்கள் அமைக்கவும் தகுந்த பயிற்சியளித்து அவர்களைத் தேசிய அணியில் இணைத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கூறிய அவர் வரும் காலங்களில் மகேல ஜயவர்தன சிறந்த தலைவருக்கான தகுதியைப் பெற்றிருப்பதாகவும் பிரசன்ன ஜயவர்தன சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் விக்கெட் காப்பாளராகவும் செயற்படக் கூடிய திறமையுள்ளவராகக் காணப்படுகின்றனர் என்றார்.




கிரண்டாவில் அமெரிக்க - கிரண்டா அணிகளுக்கிடயில் நடைபெற்ற உலகக்கிண்ண தகுதிகாண் போட்டியில் மோதும் வீரர்கள்.

## சுழல்பந்து வீச்சாளர் முரளிதரனின்பெயரில் நவீன கிரிக்கெட் பயிற்சிக் கல்லூரி

உலகப் புகழ்பெற்ற பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனின் பெயரில் கண்டியில் நவீனமுறையிலமைந்த கிரிக்கெட் பயிற்சிக் கல்லூரியொன்றை அமைக்கப்போவதாக சிறிலங்காவின் தபால், தந்தி, போக்குவரத்து மலையகஅபிவிருத்தி அமைச்சரான தி.மு.ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

கம்பளையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது சர்வதேச மட்டத்திலும் உள்ளூரிலும் புகழ் பெற்ற வீரவீராங்கனைகள் மலையகத்தில் இருந்தே பெரும்பாலும் தோன்றியிருக்கிறார்கள். எனினும் அவர்களுக்கான சிறந்த பயிற்சியளிக்கப்படுவதில்லை அவர்கள் மிகுந்த கஸ்ரத்தின் மத்தியிலேயே சாதனைகள் பலவற்றை செய்கின்றனர். இக்குறையைப் போக்க மேற்படி விளையாட்டுப் பயிற் சிக்கல்லூரியின் தேவை அவசியமாகிறது என ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

## சிந்தனைக்கு



ஒரு விடுதலைப் போராளியானவன் தனது சுயத்தின் வரம்புகளுக்கு அப்பால் மேலோங்கி, தன்னை முழுமையாகப் போராட்டத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-06-2004

மின் அஞ்சல்
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com

## சிறுபிள்ளைப் பேச்சு வேண்டாம்!

சிறிலங்கா இராணுவத்தினருடன் இணைந்துதான் கருணா செயற்படுகின்றார் என்ற விடுதலைப்புலிகளின் குற்றச்சாட்டைத் தான் முற்றுமுழுதாக மறுக்க விரும்புவதாகத் தெரிவிக்கும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத், ஏனெனில் இது குற்றச்சாட்டு என்ற நிலையில் தான் இருக்கிறது என அவர் தெரிவித்துள்ளமை உள்ளங்கைப்புண்ணினை பூதக்கண்ணாடி கொண்டு தேடுவதற்கு ஒப்பானதாகும்.

கருணா சிறிலங்கா இராணுவத்தால் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்பதற்கு ஆதாரங்கள் தேடுவதற்கு முன்னால், கருணா சிறிலங்கா இராணுவத்தினருடனேயே உள்ளார். சிறிலங்கா இராணுவத்தினரே அவரின் பாதுகாவலாகவுள்ளனர் என்பதனை எவரும் புரிந்துகொள்வதற்கு ஆதாரங்கள் தேடவோ சமர்ப்பிக்கப்படவோ வேண்டிய தேவையில்லை.

இதற்கு முதலில் ஆதாரமாகக் கூறக்கூடியது கருணா விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இல்லை என்பதே. அதாவது கிழக்கில் குறிப்பாக மட்டு–அம்பாறை மாவட்டங்களில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் யாவும் இன்றும் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இங்கு கருணா மறைந்து வாழ்தல், ஒழிந்து வாழ்தல் என்பது எதுவித சாத்தியப்பாடும் அற்றதாகும்.

அதுமட்டுமல்ல, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணா ஒழிந்து வாழ்வதற்கு முற்பட்டிருந்தால் கருணா தப்பியோடும் போது தன்கைவசம் இருந்த ஆயுததளபாடங்களைக் கைவிட்டு ஓடியிருக்க மாட்டார். அத்தோடு தமக்கு விசுவாசம் தெரிவித்துப் பின்னால் வந்தவர்களை அவர் இடைநடுவில் தேவையில்லை எனக் கைகழுவியிருக்கவும் மாட்டார். முடியுவும் மாட்டாது.

ஆனால், கருணா தப்பியோடும்போது தனது கையிலிருந்த ஆயுதங்களையும் கைவிட்டு, சிலராயினும் தனக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், கைவிட்டுவிட்டார். இந்நிலையில் கருணா தனித தியங்குவதென்பதோ, புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இயங்குவதென்பதோ சாத்தியப்பாடற்றது. இதனையாரும் நிராகரித்து விடவோ, அன்றிப் புறந்தள்ளிவிடவோ வாய்ப்பில்லை.

இவையொருபுறம் இருக்க கருணாவுடன் இறுதிநேரம் வரைநின்று அவருடன் கொழும்பு வரையில் சென்றவர்கள் திரும்பியும் வந்துள்ளனர். இவர்கள் தாங்கள் கொழும்பிலேயே தங்கியிருந்ததையும், கருணா இராணுவத்தின் பாதுகாப்புடன் அங்கேயே உள்ளதையும் தெளிவாகவே உறுதிப்படுத்துகின்றனர்.

இத்தகையதொரு நிலையில் கருணா தென்னிலங்கையில் இல்லை என்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேரத்தின் பேச்சானது சிறுபிள்ளைத்தனமான தொன்றாகவே உள்ளது. அதாவது, கருணா விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் வாழ்வதற்கான சூழ்நிலை இல்லை என்பதும் கருணாவுடன் இறுதிவரை இருந்தவர்கள் கருணா கொழும்பிலேயே இருப்பதாகத் தெரிவிக்கையிலும், அவர் சிறிலங்கா இராணுவத்துடன் கருணா இல்லை என ஹேரத் சாதிக்க முனைவதை வேறு எவ்வாறு கூறமுடியும்?.

கருணாவின் பலம் என்ன என்பது விடுதலைப்புலிகளுக்கு நன்கே தெரியும். இத்தகையோரின் பெயர்களைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசும், ஆயுதப்படைத்தரப்பும் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன என்பதும் விடுதலைப்புலிகளுக்கு நன்கே தெரியும். இதனைவிடுத்துச் சிறிலங்கா அரசோ, இராணுவமோ கூறிக்கொள்வதைக் கேட்டுக் கொள்வதற்கு புலிகளோ தமிழ் மக்களோ ஏமாளிகள் அல்ல.

ஆனால் ஒன்று கருணாவின் பெயரில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஊறு விளைவிக்கும் பணியில் ஈடுபடுதல், சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு விரோதமாகச் செயற்பட்டு பதட்டத்தைத் தோற்றுவித்தல் போன்ற நடவடிக்கைகளினால் சிறிலங்கா அரசாங்கம் பெரும் நன்மைகள் எதனையும் பெற்றுவிடப்போவதில்லை.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாவிற்கு இராணுவம் பாதுகாப்பளிக்கவில்லை எனக் கூறலாம். ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லாத கருணா இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் இல்லாது வேறு எங்கு இருக்கமுடியும்? அதுமட்டுமல்லாது, புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இல்லாமல் இலங்கையின் எப்பகுதியில் இருப்பினும் இராணுவத்தின் ஒத்துழைப்பும், பாதுகாப்பும் அவருக்கு அவசியமானதாகும். இவற்றை அரசிற்கோ ஆயுதப்படைத்தரப்பிற்கோ தெரியாமல் பெற்றுவிட முடியாது. வெளிநாட்டில் கருணா இருப்பதாயின் கருணாவின் பெயரில் நடக்கும் தாக்குதல்களுக்கு யார் பொறுப்பு? சிறிலங்கா அரசதரப்பு சில உண்மைகளை மறைப்பதற்காகப் பல பொய்களைக் கூறலாம். ஆனால் அவை யதார்த்தத்திற்கு மாறானவையாக இருப்பதால் நீண்டகாலத்திற்கு நிலைத்து நிற்கப்போவதில்லை, நிலைக்க வைக்கவும் முடியாது.

# புலிகள் பலமான அமைப்பாக இருப்பதையே விரும்புகின்றேன்

## மு.கா.தலைவர் ஹக்கீம் கூறுகிறார்

தமிழீழ விடுதலைப்புலிகள் பலமான அமைப்பாக இருப்பதையே தாம் விரும்புவதாகச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகள் பலவீனப்படுவதால் தமிழர்களின் உரிமைப்போராட்டத்தில் பாதிப்புக்கள் ஏற்படும். எனவே புலிகள் இயக்கம் பலமான நிலையில் இருக்கவேண்டும் என தாம் விரும்பும் அதேநேரம், அரசாங்கமும் பலவீனமற்றதாக இருக்க வேண்டும். அப்போதே நாட்டின் பிரச்சினையை இலகுவில் தீர்க்க முடியுமென ஹக்கீம் தெரிவித்தார்.

மேல்மாகாண சபைக்காகப் போட்டியிடும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் வேட்பாளர்களை ஆதரித்துக் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றினார்.

தன்னாட்சி அதிகாரத்தைப் பொறுத்தவரை முஸ்லிம் தரப்பும் அதில் உள்ளடக்கப்படுமானால் தமது ஆதரவு அதற்குக் கிடைக்கும் என்று அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க வேண்டுமானால் நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு திருத்தச் சபையாக மாற்றுவதைக் கைவிட வேண்டும் என்றும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் போது முஸ்லிம் தரப்பு தனித்தரப்பாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றும் இந்த இரண்டுமே தமது நிபந்தனைகளாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய அரசியல் மட்டுமல்லாமல் மாகாண அரசியலிலும் தீர்க்கமான கட்சியாக இருப்பதைக் காட்டுவதற்கே தமது கட்சிமேல் மாகாணத்தில் தனித்துப் போட்டியிடுவதாகக் கூறிய ஹக்கீம், அரசாங்கம் மிகக் குறைந்த ஆயுட்காலத்தைக் கொண்டிருப்பதாகக் கூறினார். முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கையை வலியுறுத்தியவர்கள் இன்று அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்து கொண்டு மௌனமாக இருப்பதாகவும் ஹக்கீம் குற்றம் சுமத்தினார்.

(32)

# நாட்டின் அனைத்துத் தரப்பும் ஏற்கக்கூடிய சமாதான முன்னெடுப்பை மேற்கொள்வோம்

## அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

அரசாங்கம் நாட்டின் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமாதான முன்னெடுப்பை மேற்கொள்ளப்போவதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அதற்கான முழு ஆயத்தங்களும் தற்சமயம் மேற்கொள்ளப்படுவதாக நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகமாநாட்டில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி கொண்டு சென்ற சமாதான முன்னெடுப்பைத் தமிழீழவிடுதலைப்புலிகளும் விமர்சனம் செய்ததாகச் சுட்டிக்காட்டினார். எனவே இவற்றை நிவர்த்தி செய்து சகல மக்களும் திருப்திப்படக் கூடிய வகையில் சமாதானத்தை ஏற்படுத்தத் தமது அரசு முயற்சிகள் மேற்கொள்ளுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில்பிரேம் ஜெயந்த அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றும் எனவும் மாகாணசபைத்தேர்தலின் பின்னர் பொருட்களின் விலைஏற்றம் ஏற்படும் வாய்ப்பு இல்லை எனவும் தெரிவித்தார்.

# அடுத்த பாராளுமன்ற அமர்வில் பெரும்பான்மை நிரூபிக்கப்படும்

## சிறிலங்காப் பிரதமர் மகிந்தராஜபக்ஷ

(கொழும்பு)

பாராளுமன்றம் அடுத்தமாதம் 20ஆம் திகதி மீண்டும் கூடும் போது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க அரசாங்கம் தயாராக உள்ளதாகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறும்போது சபையில் சமர்ப்பிக்கப்படும் ஆக்கபூர்வமான பிரேரணைகளை நிறைவேற்றுவதற்கு ஆளும்தரப்பு மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்றும் அவர் கூறினார்.

# ஆளும் கட்சியின் சனநாயக விரோத செயல்களை முறியடிக்க ஒன்றிணைய வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தின் சனநாயக விரோத நடவடிக் கைகளுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர்களுடன் சனநாயகத்தை மதிக்கும் சகல அமைப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பொதுத் தேர்தலின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிராக அரசாங்கம் செயற்படுவதாகவும் இதற்கு அரச ஊடகங்களைத் துஸ்பிரயோகம் செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத்தேர்தலில் வட மத்திய மாகாணத்தில் போட்டியிடும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களைச் சந்தித்து உரையாடிய போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார் ஆட்சிக்குவந்து மூன்று மாதத்திற்குள் உரத்தின் விலையை 350 ரூபாவாக்குவதாகவும் அரச ஊழியர்களுக்கு 70வீதம் சம்பளத்தை உயர்த்துவதாகவும் வாக்குறுதிகளை வழங்கிய அரசாங்கம் அதனை நிறைவேற்ற முடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ரெலிகொம் பொறியியலாளர்கள் இன்றுமுதல் பணிப்புறக்கணிப்பு

ரெலிகொம் பொறியியலாளர்கள் இன்று முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் நிறுவனத்தில் இடம்பெறும் நிதி மோசடியை வெளியிட்டமைக்காக தமது அதிகாரிகள் 4 பேர் பதவி நீக்கம் செய்யப்பட்டமையை ஆட்சேபித்தே இந்தப்போராட்டம் நடத்தப்படவுள்ளது. நாடளாவிய ரீதியில் ரெலிகொம் நிறுவனத்தில் 250 பொறியியலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

(32)




## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

அரசாங்கம் மானியங்கள் - இது ஆண்டொன்றுக்கு 15 தொடங்கி 20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. உலக மீன்பிடித் தொழிலுக்கு 20 சதவீத வருமானத்துக்குக் காரணமாக இருக்கும் அதேசமயம் அளவுக்கு மிஞ்சிய மீன்பிடித்தலையும் ஊக்குவிக்கிறது.

# ஹெல உறுமய தேரரைத் தாக்கியமைக்கு பிரதமர்,அமைச்சர் மன்னிப்புக்கோரவேண்டும்

## வலியுறுத்தி பிக்குகள் சாகும் வரை உண்ணாவிரதம்

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் கொலன்னாவ சுமங்கல தேரரை நாடாளுமன்றத்தில் தாக்கியமைக்கு பிரதமமந்திரியும், புத்தசாசன அமைச்சரும் மன்னிப்புக் கோர வேண்டும் எனக் கோரி நேற்று முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பௌத்த விகாரை ஒன்றின் உறுப் பினர்கள் 5 பேர் இதில் பங்கேற்றுள்ளார்கள். கொழும்பு புறக் கோட்டையில் உள்ள ஆல மரச் சந்தி விகாரைக்கு முன்னால் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (32)

# தென்னையிலிருந்து வீழ்ந்தவர் மயக்கமுற்ற நிலையில்

(அலுவலக செய்தியாளர்)

தென்னையில் இருந்து விழுந்த இளைஞர் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

நேற்று மாலை மூன்று மணியளவில் தென்னையில் ஏறிய துரை சிங்கம் சிறிதரன் என்பவரே தவறி விழுந்து மயக்கமுற்றதாகவும் இவர் உடனடியாக கிளிநொச்சி வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் இவரை மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

(ச,லோ)

# இருவிபத்துக்களில் இருவர் படுகாயம்

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் நேற்று இடம் பெற்ற இரு விபத்துக்களில் இருவர் படுகாயம் அடைந்தனர்.

நேற்றுக்காலை பாடசாலை சென்ற மாணவி மீது உந்துருளி மோதியதில் மாணவி காயமடைந்தார். வீரபத்திரர் கோவிலடி கச்சாய் வீதியைச் சேர்ந்த ஸ்ரெனிஸ் வோஸ் ஸரெலா (வயது - 8) என்னும் மாணவியே காயமடைந்தவர் ஆவார். இவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நுணாவிலில் இடம் பெற்ற உந்துருளி வான் விபத்தில் உந்துருளியில் பயணித்தவர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (28)

## துப்பாக்கிச்...

தாக பொலிசார் தெரிவிக்கின்றனர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவரின் முகம் கால் என்பவற்றில் காயமேற்பட்டுள்ளதாக மட்டக் களப்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்புப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கருத்தரங்கு

மிலேனியம் அபிவிருத்தி சம்பந்தமாக ஏற்கனவே பிற்போடப்பட்ட கருத்தரங்கு நாளை புதன் கிழமை மு.ப.9.00 மணிக்கு அரசாங்க அதிபர் தலைமையில், கிளிநொச்சி கச்சேரி மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஏற்கனவே அறிவிப்புப் பெற்றவர்கள் தவறாது சமூகம் கொடுத்து "வறுமைத்தணிப்பு" நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கருணாவைக்...

கேட்டதாகவும் அதன் பின்னர் தனக்கும் கருணாவிற்கும் தொடர்பு ஏதும் கிடையாதெனவும் அலிசாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார். இதேவேளை விடுதலைப் புலிகளுக்கிடையே பெரும்சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை இந்தத் தளபதியின் வெளியேற்றத்தில் சிறிலங்காப் பாதுகாப்புப்படையினர் எந்தளவில் சம்பந்தப்பட்டனர் என்பது மௌலானா வின் கூற்றிலிருந்து தெளிவாக இல்லை என பி.பி.ஸி கூறுகின்றது.

ஆனால் ஒரு முன்னணி அரசியலவாதி பாதுகாப்புப் படையினருக்குத் தெரியாமல் போட்டிக்குழு ஒன்றில் தலைவர் ஒருவரைத் தலை நகருக்குக் கொண்டு சென்றார் என்பதை கற்பனை செய்வது கடினமாக உள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

## கரும்புலிகள்...

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், எழுச்சி தின ஏற்பாட்டுக்குழுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதனிடையே நெல்லியடி மத்திய மகாவித்தியாலய முன்றலிலுள்ள கரும்புலிகள் நினைவு தூபிப் பகுதியில் கடந்த சில தினங்களாக சிரமதானப்பணிகள் இடம் பெற்று வருகின்றது.

படையினரால் உடைத்து நிர்மூலமாக்கப்பட்ட கரும்புலிகள் நினைவுமண்டபத்தின் கட்டட இடிபாடுகளும், கரும்புலி கப்டன் மில்லரினால் தகர்க்கப்பட்ட கட்டடத்தின் இடிபாடுகளும் கனரக வாகனங்களின் உதவியுடன் மக்களால் அகற்றப்பட்டு வருகின்றது.

இதனிடையே கரும்புலி தினத்தை முன்னிட்டு தேசிய விளையாட்டு நிகழ்வுகளும், வடமராட்சியில் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (27)

## வேலைவாய்ப்புத் தொடர்பாக

# இயக்கத்தில் இருந்து விலகியோர் காவல்துறையில் பதிவு செய்யவும்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து விலகிச்சென்று கிளி. மாவட்டத்தில் வசித்துவரும் முன்னாள் இயக்க உறுப்பினர்கள் அனைவரையும் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறை நடுவப் பணியகத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளவேண்டியுள்ளமையின் காரணமாக எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரையான நேரப்பகுதிகளில் தமிழீழ காவல் பணிமனை நடுவப்பணியகத்திற்கு சமூகம் கொடுத்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு தமிழீழ காவல்துறை ஆளணிப் பிரிவுப்பொறுப்பாளர் வேண்டியுள்ளார். (சோ.து)

# யாழ்.அரசசார்பற்ற அமைப்புகளின் ஒன்றியத்தின் மாதாந்தக் கூட்டம்

யாழ். மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியத்தின் மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கோவில்வீதியிலுள்ள அரசசார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியப் பணிமனையில் காலை 10.30 இற்கு இடம் பெறவுள்ள இக்கூட்டத்திற்கு ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் அமைப்புகளது பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதத்திற்கான மாதாந்த அறிக்கை தயாரித்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. (27)

## பிரி...

களுக்கும் இடையிலான சந்திப்பிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள இணங்கியிருந்த போதிலும் பின்னர் இந்தச் சந்திப்பு நடக்கமுடியாதது என அறிவித்துவிட்டது.

இதனால் சந்திரிகா முழுமையாக ஏமாற்றம் அடைந்ததுடன் பிரிட்டின் வெளிவிவகார செயலகத்தின் இந்த சாமர்த்தியமற்ற செயலால் வேதனை அடைந்துள்ளார். எனவும் ஒரு வார கால பயணத்தின் போது அவர் பிரிட்டிஷ் வெளிவிவகாரச் செயலாளர் ஜாக்சிராக்கை மட்டுமே சந்திக்க முடிந்தது என்றும் இணையத்தள செய்தி ஒன்று கூறுகின்றது.

## கருணாவைப்...

வெளியிட்டுள்ளார். எந்த ஒரு கட்டத்திலும் இராணுவத் தினருக்கு அவ்வாறான அவசியம் இருந்திருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

## இந்தியாவின்...

ஏயர்வைஸ்மார்சல் டொனால்ட் பெரேரா கூறியுள்ளார்.

அவர்மேலும் கூறுகையில்; அத்திருத்த வேலைகள் இந்திய கடனுதவியுடன் சிலமாதங்களிற்கு முன் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டதாகவும் அவர்கள் அதற்கான உத்தேசச் செலவு 500மில்லியன் எனத் தமக்கு அறிவித்ததாகவும் ஆனால் வீதிஅபிவிருத்தி அதிகாரசபை, தளமிடுதல், வெளிச்சவசதி போன்றவசதிகள் செய்வதற்கு 280 மில்லியன் ரூபா செலவேற்படும் என மதிப்பிட்டுள்ளதாகவும் கூறினார்.

இத்தாமதம் காரணமாக தான் பிரதமந்திரியிடம் விமானப்படை நீண்டகாலமாக காத்திருக்க முடியாதென்றும் இச்செலவை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை விமானப்படைக்கு மேலதிகமாக 5விமானங்கள் கொள்வனவு செய்யப்போவதாகவும் இதில் மூன்று 8-ரக பயிற்சி விமானங்கள் இரண்டு M17-ரக தாக்குதல் உலங்குவானூர்திகள் என்பனவும் அடங்கும் எனக்குறிப்பிட்ட அவர் கடைசியாகக் கொள்வனவு செய்யப்பட்ட விமானம் தொடர்பான மேலதிக கருத்துக்கள் எதனையும் தெரிவிக்க மறுத்து விட்டார்.

## கருணாவிற்கு...

நேற்றுப் பிற்பகல் தளபதி ரமணன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிற்கு உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.இம்மாநாட்டில் நிலாவினி மற்றும் மூவரும் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தனர்.

இங்கு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு நிலாவினி பதிலளிக்கும் போது தெரிவித்ததாவது,

கொழும்பில் நுகேகொட எனுமிடத் தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பாதுகாப்பில் ஒரு வீட்டில் இருந்து வந்தோம். எங்களுடன் கருணாவின் மனைவியும் பிள்ளைகளும் இருந்தனர்.

அடிக்கடி டக்ளஸ் தேவானந்தா நுகேகொட வீட்டுக்கு வந்து கருணாவை சந்தித்து போவார். அத்துடன் அவர்களுடன் தொலைபேசி தொடர்புகளும் இருந்து வந்தது. அவர்களது நடவடிக்கைச் செயற்பாடுகள் மூலம் ஒரு அரசியல் கட்சியை உருவாக்கும் திட்டம் காணக்கூடியதாக இருந்தது எனத் தெரிவித்த நிலாவினி மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தை விட்டு தப்பிச் செல்ல நேர்ந்த போது மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானாவின் வாகனம் மூலமே தப்பிச் சென்றோம். நாங்கள் நான்கு பேரும் பதினேழு ஆண்களுமாக மயிலவட்டவான் ஊடாக புலிபாய்ந்தகல் பாலம் வரை சென்றோம். அங்கிருந்து கருணா அலிசாஹிர் மௌலானாவுடன் தொடர்பினை ஏற்படுத்தி வருமாறு சொன்னார்.

பின்னர் அலிசாஹிர் மௌலானாவும் ஒரு சிறிலங்கா பொலிஸ்காரரும் வந்து எங்களை கொழும்புக்கு ஏற்றிச் சென்றனர்.

கொழும்பு சென்ற நாங்கள் ஏப்ரல் 12ம் திகதி முதல் 15ம் திகதி வரை ஹில்டன் விடுதியில் தங்கவைக்கப் பட்டோம்.

பின்பு நுகேகொட எனுமிடத்தில் ஒரு வீட்டில் இராணுவப் புலனாய்வுப் பாதுகாப்புப்பிரிவின் பாதுகாப்பில் தங்கவைக்கப்பட்டோம்.

ஒருநாள் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் என்னுடன் தொடர்பு கொண்டு என்னை இணையுமாறு கேட்டிருந்தார். ஆனால் கூடிய பாதுகாப்புப் போடப்பட்டிருந்ததால் தப்பிவர முடியவில்லை. பின்னர் எனது கையடக்கத் தொலைபேசியும் பறிக்கப்பட்டது.

எங்களை வீட்டுக்கு அனுப்பி வைக்குமாறு கூறிய போது உங்களை இந்தியா அல்லது வேறு வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கருணா கூறியதாக தெரிவித்த நிலாவினி கருணா மூன்று மாதம் வெளிநாடு ஒன்றுக்கு சென்று தங்கியிருந்து விட்டு பின் வருவதாகவும் குறிப்பிட்டார் என்றும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

பின்னர் கருணாவின் போக்கு எங்களுக்கு ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியது. நாம் தனிமைப்படுத்தப்பட்டு எங்களை விட்டு செல்லும் ஏற்பாடு போலவே தோன்றியது.

கருணா எங்களைவிட்டு விலகிய சந்தர்ப்பத்தை பார்த்து எனது அத்தான் முறையிலான உறவினர் ஒருவருடன் தொடர்பினை ஏற்படுத்தி பின்னர் குருநாகல் வரைக்கும் வந்தோம். அங்கிருந்து செங்கலடிக்கு வந்து விடுதலைப்புலிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி இங்கு வந்துள்ளோம். எனத் தெரிவித்த நிலா வினி கருணா என்ற தனி மனிதன் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும், தமிழ் மக்களுக்கும் துரோகமிழைத்ததை இப்போது உணர்ந்து கொண்டோம் என்றார்.


## கரும்புலிகள் நாளையொட்டி

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடாத்தும்

# சிறுகதை, கவிதைப் போட்டிகள்

I) சிறுகதை (பொதுவானது)
II) கவிதை (பாடசாலை மாணவர்களுக்கானது)

**நிபந்தனைகள் :**

01) தேச விடுதலை உணர்வினை மையமாகக் கொண்டு ஆக்கங்கள் எழுதப்படல் வேண்டும்.
02) சிறுகதை 05-07 வரையான பக்கங்களுக்கு மேற்படாமலும், கவிதை 20 தொடக்கம் 50 வரிக்குட்பட்டதாகவும் அமைதல் வேண்டும்.
03) பாடசாலை மாணவர்களின் படைப்புகளை பாடசாலை அதிபர் / வகுப்பாசிரியர் உறுதிப்படுத்தல் வேண்டும்.
04) ஆக்கங்கள் அனைத்தும் 01-07-2004இற்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.
05) வெற்றி பெறுபவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும், பாராட்டுச் சான்றிதழ்களும் கரும்புலிகள் நாளன்று வழங்கப்படும்.

ஆக்கங்களை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். அனுப்பவேண்டிய முகவரி,

கரும்புலிகள் நாள் போட்டி,
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(4729)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.